# இலங்கையிலும் இருதய மாற்ற முயற்சி செப்டம்பரில் மேற்கொள்ளப்படும்

கொழும்பு, சனி

இலங்கையிலும் இருதய மாற்ற சத்திர சிகிச்சை முயற்சி மேற்கொள்ளப்படவிருக்கிறது. இருதய மாற்ற சத்திர சிகிச்சைக்கு அவசியத் தேவையான உபகரணங்கள், சாதனங்கள் அமைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருவதாகவும், இதற்கான முதல் முயற்சி இவ்வருடம் செப்டம்பர் மாதத்தில் மேற்கொள்ளப்படவிருப்பதாகவும் அறியப்படுகிறது.


Registered as a Newspaper in Ceylon ★ விலைசதம் 10

# ஈழநாடு

EELANADU

மலர் 10
இதழ் 132

பொலிஸ்பெட்டி எண் 4?
போன் 389

National Tamil Daily
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் கீலக ஆனி 10 ரபி: அவ் 26 ஞாயிற்றுக்கிழமை (23-6-68)


### பிரிவினை கோரவில்லை

சென்னை, ஜூன் 21

நேற்றைய விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய தி. மு. க. பிரமுகரும், தமிழக அரசாங்கச் சட்ட மந்திரியுமான திரு. எஸ். மாதவன் தமது கட்சியால தி. மு. க. பிரிவினையைக் கோரவில்லை என்று வலியுறுத்தினர்.

நாட்டில் அரசியல் பொருளாதாரத் துறைகளில் ஒற்றுமை நிலவுவதையே தமது கட்சி விரும்புவதாகவும் அவர் குறிப்பிட்டார்

# மாவிட்டபுரம் ஆலயபிரவேசம் அரசாங்க அதிபர் இறுதி முயற்சி

## தங்கள் கடமைகள்பற்றி பொலிஸ் அதிபர் விளக்கம்

### அமைதியைப் பாதுகாக்க நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஞாயிறு

மாவிட்டபுரம்கந்தசுவாமி கோயில் வருடாந்த உற்சவம் ஜூலை மாதம் முதல் திகதி நடைபெறும் கொடியேற்றத் திருவிழாவுடன் ஆரம்பமாகிறது. இதே சமயம் கந்தசாமி கோயிலில் ஆலயப் பிரவேசம் செய்வதற்கும் முயற்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஆலயப் பிரவேசத்தை சுமுகமான முறையில் நடத்துவதற்கு யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகரா தமது இறுதி முயற்சியை மேற்கொண்டிருக்கிறார்.

இதற்கிடையில் மாவிட்டபுரம் ஆலயப் பிரவேசம் சம்பந்தமாக ஒரு நல்லமுடிவைச் செய்வதற்கு கோயில் அர்ச்சகர், பரிபாலகர்கள், உபயகாரர்கள் ஆகியோரைக் கொண்டு மூன்றுமாதங்களுக்கு முன் வடபகுதி பொலிஸ் அதிபரின் முயற்சியினல் நியமிக்கப்பட்ட குழு இன்னும் ஒரு முடிவுக்கு வரவில்லை. மேலும் மூன்றுமாத அவகாசம் தருமாறு அந்தக்குழு கேட்டதற்கு பொலிஸ் அதிபர் மறுத்துவிட்டார். சமூக ஏற்றத்தாழ்வு ஒழிப்புச் சட்டத்தை தீவிரமாக அமுல் நடத்தும்படி விடுக்கப்பட்டுள்ள உத்தரவை தாம் மீற முடியாதென்றும் ஜூலை முதல் திகதியிலிருந்து சமூக ஏற்றத்தாழ்வு ஒழிப்புச் சட்டத்தை தாங்கள் தீவிரமாக அமுல் செய்தேயாக வேண்டுமென்றும் வடபகுதி பொலிஸ் அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கம் தெரிவித்திருக்கிறார்.

சமூக ஏற்றத்தாழ்வு ஒழிப்புச்சட்டத்தை அமுல் செய்வதும் அமைதியைப் பாதுகாப்பதும் தான் பொலிசாரின் கடமையே தவிர ஆலயத்துக்குள் பலாத்காரமாகச் செல்பவர்களுக்குப்பாதுகாப்பளிப்பதல்ல என்றும் [illegible]

[5-ம் பக்கம் பார்க்க]

## கடைசி நேரத்தில் அழைப்புகள் ரத்து

யாழ்ப்பாணம், ஞாயிறு

பொலிஸ் சுப்பிரிண்டன், உதவி பொலிஸ் சுப்பிரின்டன்கள், பத்திரிகை நிருபர்கள் ஆகியோர்களது அழைப்பு கடைசி நேரத்தில் ரத்துச் செய்யப்பட்டுள்ளது. இதற்கான காரணம் என்னவென்பது உயர்தர அதிகாரிகளுக்குக்கூடத் தெரியாதாம்.

மாவிட்டபுரம் கந்தசாமி கோவில் ஆலயப்பிரவேசம் சம்பந்தமான இறுதிமகாநாடொன்று இன்றுகாலை யாழ்ப்பாணம் செயலகத்தில் நடைபெறவிருக்கின்றது. இம்மகாநாட்டை யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. வேணன் அபயசேகரா கூட்டுகின்றார்.

இம்மகாநாட்டில் கலந்து கொள்ளுமாறு வடபகுதி பொலிஸ் சுப்பிரிண்டன்ட், யாழ்ப்பாணம், காங்கேசன் துறை உதவி பொலிஸ் சுப்பிரிண்டன்கள், பத்திரிகை நிருபர்கள் ஆகியோருக்கும் ஏற்கனவே அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. ஆனால்இக் கூட்டத்துக்குச் சமுகம் கொடுக்க வேண்டாமென இவர்களுக்கு அரசாங்க அதிபரால் நேற்று அறிவிக்கப்பட்டுள்ளது.

காலை 9 மணிக்கு நடைபெறும் இம்மகாநாட்டுக்கு மாவிட்டபுரம் கந்தசாமி கோவில் அர்ச்சகர், பரிபாலன சபையினர், உபயகாரர் மட்டும் அழைக்கப்பட்டுள்ளனர். காலை 10-30மணிக்கு இதுபற்றிய பத்திரிகை நிருபர்கள் மகாநாடொன்றை நடாத்த அரசாங்க அதிபர் ஒழுங்குசெய்துள்ளார். [ஈ. நி.]

## ஆலயபிரவேசத்துக்கு மக்கள் விரும்பவில்லையாம்

### இன்று அரசாங்க அதிபரிடம் தெரிவிக்க தூதுக்குழு தெரிவு

அளவெட்டி, சனி

"மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் ஆலயப் பிரவேசத்தை இப் பகுதியிலுள்ள மக்கள் விரும்பவில்லை. ஆகவே இவ் விடயத்தில் சட்டம் என்னும் போர்வையில் பலாத்காரத்தை பிரயோகித்து மற்றும் பல இடங்களில் ஏற்பட்ட நிலைமை போன்று இங்கும் ஏற்படாது செய்ய வேண்டும்."

இம் மாதம் 23-ம் திகதி அரசாங்க அதிபரால் மேற்படி கோவில் ஆலயப்பிரவேசம் சம்பந்தமாக கூட்டப்படும் மகா நாட்டில் மேற்கண்டவாறு தெரிவிப்பதற்கு ஒரு குழு மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலில் நடைபெற்ற கூட்டமொன்றில் தெரிவு செய்யப்பட்டது.

மாவை கந்தன் ஆலய வசந்த மண்டபத்தில் இ[illegible] கோவிலில் வழிபடுவோர், கோவில் உபயகாரர், மற்றும் பல பிரமுகர்கள் உட்பட ஸ்ரீ சு. துரைசாமிக் குருக்கள், ஸ்ரீ சண்முக[illegible]

(5ம் பக்கம் பார்க்க)

## வகுப்புவாதத்துக்கு எதிரான விரிவான நடவடிக்கைகள்

### இந்திய தேசிய ஒருமைப்பாடு சபை ஏற்றுக் கொண்டது

ஸ்ரீநகர், ஜூன் 22

ஸ்ரீநகரில் கூடியுள்ள இந்திய தேசிய ஒருமைப்பாடுச் சபை, வகுப்புவாதத்துக்கு எதிரான விரிவான நடவடிக்கைகளை ஏகமனதாக ஏற்றுக்கொண்டுள்ளது.

வகுப்புவாதத்தைச் சட்டப்படி ஒரு குற்றமாகக் கருதி, அதற்கு எதிரான தடை. தண்டனை நடவடிக்கைகளைஎடுக்கவேண்டுமென்பதைச் சபை ஒப்புக்கொண்டது.

வகுப்புவாத நடவடிக்கைகளுக்காகக் குற்றஞ்சாட்டப்பட்டவர்களைத் தேர்தலுக்கு நிற்பதிலிருந்து தடைசெய்ய வேண்டுமென்ற ஆலோசனையையும்சபை ஏற்றுக்கொண்டது.

பொதுக்கூட்டங்கள். நிகழ்ச்சிகள் ஆகியன. வழிபடும் இடங்களுக்கு அருகாமையில் நடத்தப்படக் கூடாதெனவும் சபை தீர்மானித்துள்ளது.

வகுப்புக் கலவரங்களைத் தடைசெய்வதும், அவற்றை கட்டுப்படுத்துவதும் மாவட்ட அதிகாரிகளின் பொறுப்பாகும் எனக் கூறப்பட்டது. இந்தப் பொறுப்பிலிருந்து அவர்கள் தவறினல், அவர்கள் தமது கடமைகளிலிருந்து பிறழ்ந்ததாகக் கருதப்படுவர்.

நீர்வேலியில்

## 3 நாள் ஆண் சிசு கிணற்றில் கிடந்தது

### 5 குழந்தைகளின் தாயான கைம்பெண் கைது

யாழ்ப்பாணம், ஞாயிறு

மூன்று நாள் ஆண் சிசு ஒன்று தென்னந்தோப்புக் குள்ளிருக்கும் கிணற்றில் கிடக்கக் காணப்பட்டது. இதுசம்பந்தமாக ஐந்து குழந்தைகளின் தாயான கைம்பெண் ஒருவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

நீர்வேலி தெற்கில் இச் சம்பவம் நேற்று முன்தினமிரவு நடைபெற்றது. இச் சடலத்தைக் கோப்பாய்ப் பொலிஸார் இங்குள்ள தில்லையம்பலம் என்பவரது தென்னந் தோட்டதிலுள்ள கிணறொன்றிலிருந்து கண்டெடுத்தனர்.

இதுசம்பந்தமாகத் திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். கனகரத்தினம் மரணவிசாரணை நடத்தினர். சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்பட்ட கனகமணி [30 வயது] என்பவருக்கு ஐந்து குழந்தைகள் உண்டென்றும், இவரது கணவனான சண்முகம் சிவகுருநாதன் என்பவர் 3 வருடங்களுக்கு முன்னர் கொலை செய்யப் பட்டுவிட்டதாகவும் விசாரணையின்போது தெரிவிக்கப்பட்டது.

சிசுவின்சடலத்தை பிரேத பரிசோதனை செய்யுமாறு உத்தரவிட்ட மரணவிசாரணை அதிகாரி கைதுசெய்யப்பட்ட பெண்ணையும் வைத்திய பரிசோதனை செய்யுமாறு உத்தரவிட்டார். கோப்பாய் பொலிஸார் புலன்விசாரணைசெய்து வருகின்றனர். (ஈ. நி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளம்பரம்

## முல்லைத்தீவுப் பட்டின சபை கேள்வி விளம்பரம்

1-5-68-ல் ஈழநாடு பத்திரிகையில் வெளியான விளம்பரத்தில் கோரப்பட்ட கொள்ளுப்பிட்டியில் சேரி ஒழிப்புத்திட்ட வீடுகளுக்கான கேள்விகள் 1968-ம் ஆண்டு ஆனி மாதம் 30-ந் திகதிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

அ. சந்தியாப்பிள்ளை
தலைவர்,
பட்டின சபை,
842 முல்லைத்தீவு.

## லொறி ஒப்பந்தம்

தென்மராட்சி மேற்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்திற்கு லொறி மூலம் பொருட்களை ஏற்றி இறக்க விண்ணப்பங்கள் 30-6-68ந் திகதிவரை ஏற்கப்படும்.

விண்ணப்பப் பத்திரங்கள் ரூபா 10/- கட்டி சமாசக் கந்தோரில் பெற்றுக்கொள்ளலாம். தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பகாரர் ரூபா 500/- கட்டி ஒப்பந்தம் செய்துகொள்ளவேண்டும். சகல விபரங்களையும் சமாசத்தில் அறிந்துகொள்ளலாம்.

இ. வேலாயுதர்,
காரியதரிசி.

கைதடி
22-6-68. 844

## கேள்வி விளம்பரம்

1. ஒப்பந்தவேலைகள்:

[அ] 9ம்- வட்டாரம் இராசி ரோட்டு அமைத்தல்.

[ஆ] வெள்ள நிவாரண நன்கொடை வேலைகள் 4 தெரு திருத்தம்.

2. கேள்விப்பத்திரங்கள்:

(அ) கொடுத்தல் 28- 6- 1968, பி. ப. 3மணி வரை.

[ஆ] ஏற்றல்30-6-1968 மு. ப. 12 மணிவரை.

3. தகுதி:

(I) பத்தாயிரம் ரூபா பதிவு ஒப்பந்தகாரர்கள்.

(II) கேள்விப் பத்திரப் பணம் (ஒவ்வோர் வேலைக்கும்) 50/-

(III) பத்திரக் கட்டுப் பணம்(ஒவ்வோர் வேலைக்கும்) 05/-

4. விபரம் அறிதல்

(I) வடபகுதி உள்ளூராட்சி உதவி ஆணையாளர் கந்தோர்.

(II) புத்தூர் கிராம சபை அலுவலகம்.

சி. நடராஜா
தலைவர். கி.ச. புத்தூர்
கிராமசபை அலுவலகம்,
புத்தூர். 20-3-1968.
843

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

ஆதனம்:

யாழ்ப்பாணம்-20-ம்இலக்கம் இரண்டாம் குறுக்குத் தெருவில் உள்ளது. யாழ்ப்பாணத்தில் இல. 23, சப்பல் தெரு அலெது பம்பலப்பிட்டியில் 20/2, சிறப்பிகார்டினுக்குத் தொடர்பு கொள்ளவும். 1381

## தேவை

நல்ல அனுபவமுள்ள ட்ராக்டர் ரைவர், கிளீனர், பெற்ரோல் நிலையத்தில் கடமையாற்றக்கூடிய பெற்ரோல் நிரப்புபவர்கள் தேவை. விரும்புவோர் நற்சாட்சிப் பத்திரங்களுடன் நேரில் வரவும். ஆ. ச. சங்கரப்பிள்ளை அன் பிறதர்ஸ், 166, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம். 1382

ஆங்கிலத்தில் வல்லமையுள்ள ஆசிரியர்/கிளார்க்; உடனடியாக விஞ்ஞான பட்டதாரிகள்; நூலாசிரியர் ஒருவருக்கு உதவிசெய்ய; ஆங்கிலப் பட்டதாரிகள்; ஆங்கில இலக்கியமும்; பாடதிட்டப் புத்தக வகுப்புகளும், ஜி. ஸி. ஈ. (சாதாரணம்) 1968 நடக்கின்றன.
E. றெடர் பி.லிற், இல. 2 பருலாய் வீதி, சுழிபுரம்.
1383

## கப்பல் யாருடையது?

யாழ்ப்பாணப் பகுதியில் கப்பல் ஒன்று கண்டெடுக்கப்பட்டு ஈழநாடு காரியாலயத்தில் ஒப்படைக்கப் பட்டுள்ளது. உரியவர் பெற்றுக்கொள்ளலாம்.

## திரு.நடேசன் நியமனம்

கொழும்பு, சனி

தேயிலை பிரசார சபையில் ஓர் அங்கத்தவராக திரு. பி. நடேசன் நியமிக்கப்பட்டுள்ளார்.

## இந்திய அன்பளிப்பு

கொழும்பு, சனி

வித்தியாலங்கார பல்கலைக்கழகத்திற்கு இந்தியஸ்தானிகராலயம் 47 புத்தகங்களை அன்பளிப்பு செய்துள்ளது.

பௌத்த சமயம் பத்தியமாவி. சமஸ்கிருதப் புத்தகங்கள் இவை.

## தந்தி தொலைபேசி வசதி

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாண முஸ்லிம் பகுதியிலுள்ள உப தபாலிநிலையத்துக்குத் தந்தி தொலைபேசி வசதிகள் வழங்கப்பட்டுள்ளன.


"ராதா"

## மட்டிப்பால் பத்தி

மட்டில்லா வாசனை தருவது.
மங்காத புகழ் பெற்றது.
மனோரம்மியமான நறுமணம் கமழ்வது.
இறைவழிபாட்டிற்கும், இல்லங்களில் பாவிப்பதற்கும் இன்றியமையாதது.
தயாரிப்பாளர்கள்:
ராதா பெர்பியூமரி அன் ராதா புறடக்ஸ்
ஏக விநியோகஸ்தர்கள்:

## எஸ். சுப்பிரமணியம் அன் கொம்பனி

53, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.
160, செட்டியார் தெரு கொழும்பு-11.
போன்: 541 Residence: 7068






எப்பயிர்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
அப்பயிர்க்கு 'ஷெல்' பூச்சி நாசினி பயனை பாவிக்காரெனில்
AGENTS

## றேயல் டிஸ்பென்ஸறி

PHONE 397 JAFFNA


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரான்ஸில் இன்று தேர்தல்

## பத்து வருட டி கோல் ஆட்சி பற்றி மக்கள் முடிவு செய்வர்

பாரிஸ், ஜூன் 23

**பிரான்ஸில் இன்று பொதுத் தேர்தல் நடைபெறுகிறது. ஜனாதிபதி டி கோலின் பத்து வருட கால ஆட்சி தொடர்ந்து நடைபெறுமா என்பதைப் பிரான்ஸ் இன்று தீர்மானிக்கவிருக்கிறது.**

நேற்று நாட்டு மக்களுக்கு விடுத்த செய்தியொன்றில் தமது அரசாங்கத்துக்கு உறுதியான பெரும்பான்மை ஆதரவு அளிக்குமாறு பிரெஞ்சுப் பிரதமர் திரு. பொம்பாடு கேட்டுக் கொண்டார். அப்போது தான், நாட்டை எதிர்நோக்கியுள்ள முக்கிய பிரச்னைகளைத் தீர்க்குமுகமாக அரசாங்கம் முன்னேறிச் செல்ல முடியுமென்று அவர் கூறினார்.

இடதுசாரிக் கட்சிகளின் ஐக்கிய முன்னணித் தலைவர் நேற்று இங்கு பேசுகையில், தங்கள் கையிருப்பைப் பாதுகாத்துக் கொள்வதற்காக, டிகோல் அரசாங்கம் தொழிலாளர் ஊதியங்களையும், பொருளாதார உறுதிப்பாட்டையும் தியாகம் செய்து விட்டதாகக் குற்றஞ் சாட்டினார்.

மத்திய கட்சித் தலைவர் பேசுகையில், நாட்டின் முக்கிய பிரச்சினைகளான வீட்டு வசதி, வேலையில்லாத் திண்டாட்டம் ஆகியவற்றைத் தீர்ப்பதற்கு முயலாமல், அணு ஆயுத கையிருப்பை அதிகரிப்பதிலேயே டிகோல் அரசாங்கம் அதிக அக்கறை காட்டி வருவதாகத் தெரிவித்தார்.

### அஸ்ஸாமில் கடும் வெள்ளம்

### 10 லட்சம் பேர் பாதிக்கப்பட்டனர்

ஷில்லொங், ஜூன் 22

அஸ்ஸாமில், வெள்ளத்தினால் பத்து லட்சம் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. நிவாரண வேலைகளில் உதவி செய்வதற்கென இராணுவமும் அழைக்கப்பட்டுள்ளது.

ஆயிரத்துக்குமதிகமான மக்கள், விசேஷ முகாம்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

# அணு ஆயுத பரவல் தடை ஒப்பந்தம்

## ஜூலை 1-ந் திகதியன்று கைச்சாத்திடப்படும்

### டீன் ரஸ்க் அறிவிப்பு

வாஷிங்டன், ஜூன் 22

**அணு ஆயுத பரவல் தடை ஒப்பந்தம் ஜூலை மாதம் 1—ம் திகதியன்று, வாஷிங்டன், மாஸ்கோ, லண்டன் ஆகிய தலைநகர்களில், ஒரே மாதிரியான வைபவத்தின் போது, கைச்சாத்திடப்படும். அதைத் தொடர்ந்து, பிற நாடுகள் அதில் கைச்சாத்திடுவதற்கென, அது திறந்து வைக்கப்படும்.**

இத்தகவலை, அமெரிக்க ராஜாங்க காரியதரிசியான திரு. டீன் ரஸ்க், நேற்று வாஷிங்டனில் நடத்திய பத்திரிகை மாநாட்டொன்றில் வெளியிட்டார்.

அணு ஆயுத கையிருப்புக்களைக் குறைப்பதற்கான நடவடிக்கைகள் சம்பந்தமாக, ரஷ்யாவுடன் விரைவிலேயே பேச்சுவார்த்தைகள் நடத்த அமெரிக்கா விரும்புவதாகத் திரு. டீன் ரஸ்க் தெரிவித்தார்.

பத்திரிகை மாநாட்டில், வியட்நாம், மேற்கு ஆசியா, கிழக்கு ஜெர்மனி ஆகியன பற்றியும் திரு. ரஸ்க் குறிப்பிட்டார்.

**வியட்நாம் பிரச்னை**

பாரிஸில் நடைபெறும் வியட்நாம் பேச்சுவார்த்தைகள் பற்றித் திரு. ரஸ்க் குறிப்பிடுகையில், அவற்றின் வெற்றி, தோல்வி பற்றிக் கூற இப்போது காலம் போதாது என்றார்.

ஆனால், அமெரிக்க ஜனாதிபதி திரு. ஜோன்ஸன், வியட்நாம் போரை விஸ்தரிக்க வேண்டாமெனக் கேட்டுக் கொண்டதற்கு, வட வியட்நாமிடமிருந்து எவ்வித ஒத்துழைப்பும் கிடைத்ததாகத் தெரியவில்லை என்று திரு. ரஸ்க் கூறினார்.

வியட் கொங்கியர், தென் வியட்நாம் மீதான தமது ரொக்கெட், குண்டுத் தாக்குதல்களைக் குறைப்பதாக இல்லை என்று திரு. ரஸ்க் கூறினார்.

வியட் கொங்கியர், வட வியட்நாமியர் இரு தரப்பினரும் தமது தாக்குதல்களைக் குறைத்துக் கொண்டால், அமெரிக்கா பதில் நடவடிக்கையாக வட வியட்நாம் மீது தனது குண்டு வீச்சை நிறுத்துமா என்று கேட்கப்பட்ட போது, திரு. ரஸ்க் எவ்வித பதிலும் அளிக்கவில்லை.

**பேர்லின்**

மேற்கு பேர்லினுக்கும் கிழக்கு பேர்லினுக்குமிடையேயான பிரயாணப் போக்குவரத்தில், அண்மையில் கிழக்கு பேர்லின் விதித்துள்ள புதிய தடைகள் பற்றித் திரு. ரஸ்க் குறிப்பிடுகையில், இத்தகைய நடவடிக்கைகளால், கிழக்கு பேர்லின், மேற்கு வல்லரசுகளிடமிருந்து எதிர் நடவடிக்கைகளை எதிர்நோக்க வேண்டியிருக்கும் என்று எச்சரித்தார்.

**மே. ஆசியா**

மேற்கு ஆசியா பற்றித் திரு. ரஸ்க் கருத்துத் தெரிவிக்கையில் ஜோர்தான் ஆற்றின் மேற்குக் கரையில் இராணுவ நிலையங்களை நிறுவுவதென்ற இஸ்ரேலின் உத்தேச நடவடிக்கையைக் கண்டித்தார்.

மேற்கு ஆசியாவின் ஐ. நா. விசேஷ பிரதிநிதியாகக் கடமையாற்றும் டாக்டர் குனார் ஜாரிங்கின் தூது கோஷ்டிக்கு அமெரிக்காவின் முழு ஆதரவும் இருப்பதாகவும் திரு. ரஸ்க் கூறினார்.

---

### உலக மாணவர் சிறுகதை போட்டி

### இந்தியப் பெண்ணுக்கு முதற் பரிசு

நியூயோர்க், ஜூன் 22

பட்டப்படிப்புக்கு முந்திய தரமான மாணவர்களுக்கென அமெரிக்கப் பத்திரிகையொன்று நடத்திய உலகச்சிறுகதைப் போட்டியில் பம்பாயைச்சேர்ந்த செல்வி மாயா கிருஷ்ணமூர்த்தி என்பவருக்கு முதற்பரிசு கிடைத்துள்ளது.

வெற்றி பெற்ற அவரது சிறு கதையின் தலைப்பு 'மன்னிப்பு' (THE REPRIEVE) என்பதாகும்.

முதற்பரிசுக்கான 50,000 டொலர் ஐ. நா. விலுள்ள இந்திய நிரந்தரப்பிரதிநிதி திரு. ஜி. பார்த்தசாரதியிடம் ஒப்படைக்கப் படும்.

---

### பாரிஸ் பேச்சில் முன்னேற்றமில்லை

### வடவியட்நாம் கருத்து

பாரிஸ், ஜூன் 22

பாரிஸ் வியட்நாம் பேச்சுவார்த்தைகளில் எவ்வித முன்னேற்றமும் காணப்படவில்லையென வடவியட்நாம் பிரதிநிதிகள் கோஷ்டியின் பேச்சாளர் ஒருவர் இங்கு கருத்து தெரிவித்துள்ளார்.

இதற்குக்காரணம் அமெரிக்காவே என்றும் அவர் குறிப்பிட்டார்.

# உலகின் பல பாகங்களிலும் மாணவர் ஆர்ப்பாட்டங்கள்

## நால்வர் கொல்லப்பட்டனர்: நூற்றுக்கு அதிகமானோர் காயம்

ரியோடிஜெனரோ, ஜூன் 22

பிரேஸில் தலைநகரான ரியோடிஜெனரோவில், ஆர்ப்பாட்டம்செய்த மாணவர்களுக்கும் பொலிசாருக்குமிடையே நடந்த மோதல்களில், 3 பேர் கொல்லப்பட்டனர். மற்றும் 150 பேர் காயமுற்றனர். நூறு பேருக்கு மேல், பொலிசாரால் கைதுசெய்யப்பட்டனர்.

மாணவ ஆர்ப்பாட்டக்காரர், ஒரு தெருவை முற்றுகையிட்டபோது, பொலிசார் அவர்களிடையே புகுந்து, குண்டாந்தடி, கண்ணீர் புகைப்பிரயோகம் செய்து அவர்களைக் கலைத்தனர்.

ஆர்ப்பாட்டம் செய்த மாணவர், வழியிலிருந்த அமெரிக்கத்தூதரக ஜன்னல் கண்ணாடிகளையும் அடித்து நொறுக்கினர்.

கல்வித்துறையில் அரசாங்கம் அதிக அளவில் செலவிட வேண்டுமெனக் கோரியே மாணவர்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

### செக். நாட்டில்

### 4 உதவி மந்திரிகள் பதவி நீக்கம்

பிராக், ஜூன் 22

செக்கோஸ்லவாக்கிய உள்துறை அமைச்சைச் சேர்ந்த நான்கு உதவி மந்திரிகள் பதவி நீக்கம்செய்யப்பட்டுள்ளனர்.

உள்துறை மந்திரியின் ஆலோசனைக்கிணங்கவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதென்பதைத்தவிர வேறு ஒரு காரணமும் தெரிவிக்கப்படவில்லை.

---

### வாஷிங்டனில் ஹரிமன்

வாஷிங்டன், ஜூன் 22

பாரிஸிலிருந்து வாஷிங்டன் திரும்பிய, பாரிஸ்பேச்சுவார்த்தைகளில் அமெரிக்கப் பிரதிநிதிகள் கோஷ்டியின் தலைவரான திரு. அவரெல் ஹரிமன், ஜனாதிபதி ஜோன்ஸனைச் சந்தித்துப் பேச்சுவார்த்தைகள் பற்றிப் பேசியுள்ளார்.

வடவியட்நாமின் இல ஆலோசனைகளுக்கு அமெரிக்கா சம்மதம் தெரிவித்திருந்த போதிலும், வடவியட்நாம் பிரதிநிதிகள் போதிய ஒத்துழைப்பு அளிக்க முன்வரவில்லை எனத் திரு. ஹரிமன் தெரிவித்துள்ளார்.

---

### டொமினிக்கன் குடியரசில்

சாண்டோ டொமிங்கோ, ஜூன் 22

டொமினிக்கன்குடியரசின் தலைநகரான சாண்டோ டொமிங்கோவில், போட்டி மாணவர்கோஷ்டிகள் இரண்டுக்கிடையே நடந்த மோதலின்போது, ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

### வடக்கு இத்தாலியில் மாணவர்-பொலிஸார் மோதல்

ரோம், ஜூன் 22

வடக்கு இத்தாலியில், மாணவர் மோதல்கள் ஏற்பட்டுள்ளன.

இங்கு நடைபெறவிருக்கும் சர்வதேச வர்த்தக விழாவொன்றுக்கு எதிர்ப்புத்தெரிவிக்குமுகமாகத் தெருக்களில் ஆர்ப்பாட்டம் செய்த மாணவர்களும், வேலைநிறுத்தம் செய்யும் தொழிலாளர்களும் வழியில் வந்த கார்களை நிறுத்தியும், கற்கள் வீசியும் கார்களைப் புரட்டியும் பல வன்முறைச் செயல்களில் ஈடுபட்டனர்.

அவர்களைப் பொலிசார் கலைக்க முயன்றபோது, இரு தரப்பினருக்குமிடையே பலத்த மோதல் ஏற்பட்டது.

இம்மோதல்களில், 19பேர் காயமுற்றனர். அவர்களில் பெரும்பான்மையினோர் பொலிசாரே. பொலிசார் 60 பேரைக் கைதுசெய்தனர்.

### துருக்கித் தலைநகரில் 10,000 மாணவர் ஆர்ப்பாட்டம்

அங்காரா, ஜூன் 22

துருக்கித்தலைநகரான அங்காராவில், பல்கலைக்கழகங்களில் சீர்திருத்தம் கோரி ஆர்ப்பாட்டம் செய்யும் மாணவர்கள், தமது வேலைநிறுத்தத்தின் 11 வது நாளாகிய நேற்று, பள்ளிக் கூடக்கட்டிடங்களைத் தாக்கினர்.

சுமார் 10,000 மாணவர்கள், நேற்றைய ஆர்ப்பாட்டங்களில் கலந்து கொண்டனர்.

### பாங்கொக்கிலும் மாணவ ஆர்ப்பாட்டம்

பாங்கொக், ஜூன் 22

தாய்லாந்தின் தலைநகரான பாங்கொக்கில், 500 மாணவர்கள் பொலிசாருடன் மோதினர்.

பஸ்கட்டணங்கள் குறைக்கப்படவேண்டுமென்றும், பாங்கொக்குக்கு அமெரிக்க இராணுவ சேவையாளர் [illegible] மாணவர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளனர்.

சைவ மங்கையர் கழகம்
கொழும்பு
"பக்த நந்தனார்"
வெள்ளவத்தை, சைவ மங்கையர் வித்தியாலய மாணவிகளால் நடிக்கப்படும் இந்த நாடகம்
யாழ்ப்பாண
நகர மண்டபத்தில்
ஜூன் மாதம் 24-ம் 25-ம் திகதிகளில் நடைபெறும்.
அனுமதிச்சீட்டு விபரம்:
போஷகர் — ரூபா 25/-
முதலாம் வகுப்பு — ,, 10/-
இரண்டாம் வகுப்பு — ,, 5/-
பிள்ளைகள் — ,, 2/-
822

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலயப்பிரவேசத்தில் பலவந்தம் வேண்டாம்

## திரு. சுந்தரலிங்கம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஞாயிறு

மாவிட்டபுரம் ஆலயப் பிரவேசம் சம்பந்தமாக முன்னாள் வவுனியா எம்.பி.யும் ஈழத்தமிழர் இன விடுதலை இயக்கத் தலைவருமான திரு. சி. சுந்தரலிங்கம் நேற்று ஓர் அறிக்கை விடுத்தார். அந்த அறிக்கையில் அவர் குறிப்பிட்டுள்ளதாவது:

சில பத்திரிகைகளில் காலாதிகாலமாக இருந்து வந்த முறைகளுக்கும் வழக்கத்துக்கும்மாறாக மாவட்டபுரம் முருகன் ஆலயப்பிரவேசம் சம்பந்தமாக வெளிவந்த செய்திகளைப்பார்த்து நான் அதிர்ச்சியடைந்தேன்.

நான் வடபகுதி பொலிஸ் அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கத்தை இச்செய்திகள் சம்பந்தமாகச் சந்தித்துப் பேசினேன்.

இந்த விஷயத்தில் ஆலய முகாமைமையாளர் அல்லது ஆலயப் பிரதம குருக்களின் அனுமதியோ சம்மதமோ வெறுமனே ஆலயத்துக்குள் பிரவேசிக்க தமக்கு உரிமை இருப்பதாகக் கருதும் ஒருவர், ஆலயத்துக்குள் செல்லாதவாறு தடுக்கப்பட்டால் அல்லது ஆலயத்தினுள் செல்லலாகாதுஎனக்கோரப்பட்டால், அவர் செய்யக்கூடியது. ஆலயத்துக்குச் சமீபத்திலுள்ள ஒரு பொலிஸ் நிலையத்துக்கு அமைதியாகச் சென்று முறைப்பாடுசெய்வதுதான். இந்த முறைப்பாட்டைக் கேட்பதுதான் பொலிஸ் செய்யக்கூடியதுமாகும். குறைபாடுள்ள ஒருவர் அமைதியைக் குலைத்து ஆலயத்துக்குள் பலவந்தமாகப் பிரவேசிக்கவோ, பலவந்தம் பிரயோகிக்கப் போவதாகப் பயமுறுத்தியோ ஆலயத்துக்குள் பிரவேசிக்கவோ அவருக்கு உரிமைகிடையாது. முறைப்பாடு செய்தவரின் முறைப்பாட்டை விசாரித்து ஆராய்ந்து, குற்றம் எதுவும் இழைக்கப்பட்டிருந்தால் 1957-ம் வருடத்திய 21-ம் இலக்க சமூக ஏற்றத்தாழ்வு ஒழிப்புச் சட்டம் வழங்கியுள்ள அதிகாரத்தின்கீழ் பொலிசார் நடவடிக்கை எடுப்பார்கள் என்பதில் ஐயமில்லை. குற்றம் இழைக்கப்பட்டிருந்தால், குற்றம் செய்தவர்மீது பொலிசார் வழக்குத் தொடருவர். ஆலயத்துக்குள் பலாத்காரமாகப் பிரவேசிக்கமுனையும் எவருக்கும் பொலிசார் உடந்தையாக இருக்கமாட்டார்களென்றும் அமைதியைக் குலைக்க முனையும் எவருக்கும் அவர்கள் பாதுகாப்பளிக்கமாட்டார்களென்றும் வடபகுதி பொலிஸ் அதிபர் எனக்கு உறுதியளித்திருக்கிறார். இதற்குமாறாக கொடிகளைத் தூக்கிக்கொண்டோ, பலவந்தமாகவோ ஆலயத்திற்குள் நுழைய எத்தனிக்கும் எவரையும் அல்லது எந்தக் கோஷ்டியினரையும் பொலிசார் தடை செய்வார்களென்றும் அவர் தெரிவித்தார்.

ஆலயத்திற்குள் பிரவேசிக்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்ளப்படுபவர் எவரும் ஆலயத்துக்குள் பலவந்தமாகப் பிரவேசிக்க எத்தனிக்கக் கூடாதென்றும், பலவந்தமாக ஆலயத்தினுள் பிரவேசிப்பதற்கு பொலிசார் உதவியாகவும், உடந்தையாகவும் இருப்பார்களென்ற எண்ணத்தை எவரும் ஊட்ட வேண்டாம் என்றும் நான் மீண்டும் கேட்டுக்கொள்கிறேன். முறைப்பாடுகளின் மீது நடவடிக்கை எதுவும் எடுப்பதற்கு நீதிமன்றத் திற்குத்தான் அதிகாரம் இருக்கிறதேயொழிய தனிப்பட்ட எவருமோ சாகியத்தாரோ சட்ட அதிகாரத்தைத் தாங்களே தங்கள் கைக்குள் எடுத்துக்கொள்வதற்கு உரிமையில்லை. நூற்றாண்டுகாலமாக இருந்துவரும் சமூகத்தீமையை சத்திரசிகிச்சை வைத்தியரின் கத்தியைக் கொண்டோ துப்பாக்கிக் குண்டுகளைக் கொண்டோ ஒழித்துவிட எவரும் எத்தனிக்கக் கூடாது.

மாவிட்டபுரம் கந்தசாமி கோவில் பிரதம குருக்களையும், வடபகுதி பொலிஸ் அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கத்தையும் சந்தித்த பின்னரே இந்த அறிக்கையைவிடுத்துள்ளேன்.

மணிவாசகம்

நமக்கு இன்பமும் சாந்தியும் எங்கிருந்து வருகிறது? நம் உள்ளத்திலிருந்து தான். பேரின்பமும், சாந்தியுமான கடவுள் நம் எல்லாருடைய உள்ளத்திலுள்ளார். மறவாமல், அதை உண்மையில் உணர்ந்தவர்களுக்கு இன்பமே எந்நாளும் துன்பமில்லை.

—சுவாமி ராமதாஸ்

ஈழநாடு

Eelanadu National Tamil Daily

Telegrams: EELANAD Jaffna

Post Box 49 Jaffna.

Telephone 389.

சாதுர்லிாசனி கீலகவருஷம் ஆனி மாதம் 10-ந்திகதி

(23-6-68)

## கட்சி அரசியல் முறை

'இலங்கையில் இப்பொழுது நடைமுறையிலுள்ள கட்சி அரசியல் முறை நாட்டு மக்கள் மத்தியில் வேற்றுமையையும் பிளவையும் ஏற்படுத்திநாட்டின் முன்னேற்றத்துக்குப் பெரும் தீங்கு விளைவித்திருப்பது மட்டுமல்லாது குடும்பங்களைக் கூட சீர்குலைத்திருக்கிறது இலங்கை ஆட்சி மன்ற மேல் சபைத் தலைவரும் அகில இலங்கை பௌத்த காங்கிரஸ் முன்னாள் தலைவரும் மந்திரிப் பதவிகள் பல வகித்தவருமான அரசியல் அனுபவஸ்தரான திரு. ஏ. இரத்தினாயகா இப்படித் தெரிவித்திருக்கிறார். எதற்கும் தமக்குச் சாதகமான கருத்தையே கூறும் அரசியல் வாதிகள் மலிந்துள்ள இக்காலத்தில் திரு. இரத்தினாயகாவின் கருத்துப்பற்றி யாரும் சந்தேகம் கொள்ளாவிடின் அது விவேகமாகாது.

கட்சி அரசியல் முறை இலங்கையில் மட்டுமல்ல உலக நாடுகள் பலவற்றிலுமே பல்வேறு விதமான தீமைகளைச் செய்துவருகிறது. செல்வம் கொழிக்கும் தேசமாக வளர்ந்துள்ள அமெரிக்கா ஜனநாயகவாழ்க்கை முறையில் சிறந்த வழிகாட்டியாகத் திகழ்ந்து வந்திருக்கிறபோதிலும் இரு கென்னடிகளின் உயிர்கள் பலிகொள்ளப்பட்டது இந்தக் கட்சி அரசியல் முறையினால்தான் என்பதை எவரும் ஒப்புக்கொள்வர். இலங்கையில் சமூக ஒற்றுமை சீர்குலைந்து நாடு பின்தங்கிய நிலையிலிருப்பதற்கும் கட்சி அரசியல் முறைதான் காரணம் என்பதை மறுப்பதற்கில்லை. பொதுத் தேர்தல் முடிந்து ஒரு கட்சியினர் ஆட்சிக்குவந்ததும் அந்தக் கட்சியை ஆட்சிபீடத்திலிருந்து எப்படி இறக்கலாம் என்பதில் தான் ஆட்சிபீடத்துக்கு வரமுடியாமல் போன கட்சியினர் பெரிதும் ஈடுபடுகின்றனர். இதற்காகக் கொள்கையில் வேறுபாடுடைய பல கட்சிகள் ஒன்றுசேர்கின்றன. தேர்தல் முடிந்ததும் மாற்றுக் கட்சியினரை ஆட்சிபீடத்துக்கு வராமல் தடுப்பதற்காகவும் வேறுபட்ட கொள்கைகளையுடைய பலர் சேர்ந்து 'சாம்பார்' அரசாங்கம் அமைத்துக் கொள்கின்றனர். இதுவும் சிக்கலில் முடிகிறது. ஆட்சிக்கு வருபவர்களும் ஆட்சிக்கு வரத்தவறியவர்களும் அடுத்த தேர்தலில் வெற்றி பெறுவது எப்படி யென்பதில்தான் கவனம் செலுத்துகின்றனரேயொழிய அடுத்த சந்ததியினரைப் பற்றிக் கவலைப்படுவதாக இல்லை. 'தனக்கு மூக்குப் போனாலும் எதிரிக்குச் சகுனப் பிழை ஏற்பட்டால் போதும்' என்ற மனப்பான்மையைத்தான் இந்தக் கட்சி அரசியல்முறை உருவாக்கி வளர்த்திருக்கிறது.

ஜனநாயகம் ஆசிய, ஆபிரிக்காவுக்குப் புதியது. இன்னும் இப்பகுதியில் இது பரீட்சார்த்த நிலையிலேயே இருக்கிறது. கட்சி அரசியல் பெரும் தீமைகளுக்கு வழிகாட்டியதால் தான் ஆசிய ஆபிரிக்க நாடுகள் பலவற்றிலும் ஜனநாயகவாழ்க்கை முறை தோல்வியடைந்ததற்கும், கட்சி அரசியல் முறை நீக்கப்பட்டு ஒரு கட்சி ஆட்சிகளும், சர்வாதிகார ஆட்சி முறைகள் ஏற்பட்டதற்கும் காரணம்என்று சொல்லலாம்.

ஜனநாயக ஆட்சி அமைப்பு சிறந்ததேயெனினும் அதிலுள்ள நல்ல அம்சங்களை மட்டும் வைத்துக் கொண்டு, நாட்டுக்குத் தீமையான அம்சங்களை அகற்றி நாட்டின் முன்னேற்றத்துக்கான புதிய முறையொன்றை உருவாக்க முன்வர வேண்டியது அவசியம். இதற்கு செனட் சபைத் தலைவர் திரு. இரத்தினாயகா போன்றவர்கள் செயலான திட்டங்களை வகுத்து நாட்டு மக்கள் முன்வைக்க வேண்டும். தேசிய ஐக்கியம் சீர்குலைந்து, நாடு முன்னேற முடியாமல் பல கெடுதிகளைச் செய்துள்ள கட்சி அரசியல் முறையை மாற்றுவதற்கு நாட்டு மக்களின் ஆதரவு நிச்சயம் கிடைக்குமென்று எதிர்பார்க்கலாம்.

## தமிழாசிரியர் சங்க நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், வெள்ளி

அகில இலங்கை சுவீகரிக்கப்பட்ட தமிழாசிரியர்சங்க புதுவருட நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. எஸ். செல்லையா, உபதலைவர்கள்: திரு. என். கந்தையா, திரு. என். வரதலிங்கம், செயலாளர்: திரு. மி. திருநாவுக்கரசு, உபசெயலாளர்: திரு. கே. சிற்றம்பலம், பொருளாளர்: திரு. எஸ். கயிலாசபிள்ளை. 5பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரியப்பட்டது. (கா நி.)

## திருவிழா

சுழிபுரம், ஞாயிறு

சித்தன்கேணி சிவசிதம்பரேஸ்வரர் ஆலய வருடாந்த மகோற்சவம் இன்று கொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பமாகின்றது. வருகிற மாதம் 1-ம் திகதி தேர்த்திருவிழாவுடன் உற்சவம் முடிவடையும்.

## "மனைவி மக்களுடன் சமய ஆராதனைகளில்ஈடுபடுங்கள்"

### வவுனியாவில் சுத்தானந்தர்

வவுனியா, சனி

'இலங்கையில் எங்குநோக்கினும் தமிழ் மக்களிடையே சமய விழிப்புணர்ச்சியைக் காணக்கூடியதாக இருக்கிறது. சென்ற காலங்களிலும் பார்க்க இப்பொழுது அதிகமாக சமய வழிபாடுகளை மக்கள் கடைப்பிடித்து வருவது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.'

இவ்வாறு சுத்தானந்த இந்து இளைஞர் சங்கத்தின் சார்பில் வவுனியா தமிழ் மகாவித்தியாலயத்தில் அட்வக்கேட் சதா. ஸ்ரீனிவாசன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் சுத்தானந்தபாரதியார் பேசுகையில் கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், இந்து சமயத்தவர்கள் தமது நாளாந்த வாழ்க்கையில் மனைவி மக்களுடன் சமய ஆராதனைகளில் ஈடுபடுவதன் மூலம் [illegible] உணர்ச்சிகளை உயர்வுபெறச் செய்வதற்கு சமய வளர்ச்சிதான் ஊன்றுகோலாக அமைய முடியும். அதன்பின்னரே அரசியல் என்றார்.

உலகிலுள்ள ஒவ்வொரு மதங்களும் அதன் நிலையில் உயர்வுள்ளதாகும் ஆதலால் அகில உலகம் முழுவதும் அன்பும் - அறனும் உடையதாக இயங்க வைக்க வேண்டுமானால் அகில உலகத்தை ஆலயமாக எண்ணி அதிலுள்ள உயிர்க்கூட்டம் அனைத்திற்கும் சேவை செய்வதே பூசனையாகவும் அதன்மூலம் உயிர்க்குலம் இன்புற்று வாழ்வதைக் காண்பதே முத்தியாகவும் கருதி நாம் ஒவ்வொருவரும் வாழப் பழகிக்கொள்ள வேண்டும். அதுவே நிலையான இன்பத்துக்கு வழி.

திரு. சதாசிறினிவாசகன், [illegible] தலைவர் திரு ம. [illegible]ன்னையா முதலியோரும் பேசினர்.

## அச்சுவேலி வீடமைப்புதிட்டம் 2—வதுகட்டிட வேலைகள்ஆரம்பம்

யாழ்ப்பாணம், சனி

அச்சுவேலி வீடமைப்புத் திட்டத்தில் 2வது கட்டட பூர்வாங்க வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

இவ்வேலைகள் நேரடியாக நீர்வழங்கல் வடிகாலமைப்பு உள்ளூராட்சிப் பகுதியினராலும் யாழ்ப்பாணம் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. சு. முருகவேல் வடமாநிலப் பொறிஞர் திரு. சி. புவனேஸ்வரன் ஆகியோரின் அனுசரணையுடனும் நடாத்தப்படுகின்றது.

ஏற்கனவே அமைக்கப்பட்ட 54 வீடுகளும் இம்மாதம் 28ந்திகதி தெரிவு செய்யப்பட்ட சிறுபான்மைத் தமிழர் குடும்பங்களுக்கு கையளிக்கப் படஇருக்கின்றன.

இவ் வைபவத்திற்கு உள்ளூராட்சி அமைச்சர் திரு. எம் திருச்செல்வம் தலைமை தாங்குவார். உள்ளூராட்சி அமைச்சின் நாடு நகர நிர்மாணப்பகுதியினரால் இவ் வைபவம் நடாத்தப்பட இருக்கின்றது. [ந.நி]

## இன்றைய பலன்

[23 - 6 - 68]

ஆனி மீ 10 உ

ஞாயிற்றுக்கிழமை

திதி- திரயோதசி. இரவு 12-49 வரை மேல் சதுர்த்தசி.

நட்சத்திரம்- கார்த்திகை. பகல் 3-08 வரை மேல் ரோகிணி.

ராகுகாலம் - 4-24—5-54

சுபநேரம் - 8-54—10-24

இன்று பிறந்தவர்களுக்கு- இவ்வாண்டு நல்ல சந்தர்ப்பங்களுக்கு இடமுண்டு. பூமி விருத்தி, மனை இயற்றல், மைந்தர்கள் மகிழ்ச்சி, மங்கையர் வாழ்வில் சுப கருமங்களுக்கு இடமுண்டு. உத்தியோகஸ்தர்களுக்கு உயர்வில் திருப்தியும் விவசாயிகளுக்கு வெற்றியான ஆண்டாகும்.

மேஷம்- திரைமறைவில் சதி, திறமை தடைப்படும்.

ரிஷபம்- ஏக்கம் தாக்கும். தூக்கம் கெடும்.

மிதுனம்- மனைவியின் மலர்ச்சி, மனதில் ஆனந்தம்.

கடகம்- ஆசை வைக்காதே அவதிப்படாதே.

சிம்மம்- நல்ல முடிவுகள் நன்மை செய்யும்.

கன்னி- இன்பத்தின் சாயல், பனிமலர்ப் பார்வை.

துலாம்- அவப் பெயர் வரும், ஆழ்ந்த சிந்தை.

விருச்சிகம்- கண்ணின் கடைப்பார்வை, காதலில் வெற்றி.

தனுசு- ஏகாந்த நிலை. எதிர்பாராத முடை.

மகரம்- பிதாவழிச் சுகம், பேச்சில் திருப்தி.

கும்பம்- பொருள்வரவு புண்ணிய விருப்பு.

மீனம்- தானியநஷ்டம் தனிவழி நாட்டம்.

— சோதிடக்கலாநிதி —

திருமலை வேலுப்பிள்ளை

## கல்லூரி வளர்ச்சி[க்குக்] காரணமாயிருப்ப[...]

யாழ்ப்பாணம்[...]

பாடசாலையின் வள[...] பெற்றோரினதும், ஆசி[...] களினதும் ஒத்துழை[...] தங்கியிருக்கின்றது. [...] தைகளின் கல்வி மே[...] பதில் நாம் அக்கறை[...] இருக்கவேண்டும்.

இவ்வாறு தட்டா[...] இந்து தமிழ் கலவன் [...] சாலை பெற்றோர் ஆ[...] சங்கக்கூட்டத்திற்குத் [...] தாங்கிப் பேசிய திரு. [...] கந்தசாமி குறிப்பிட்ட[...]

பாடசாலையின் வள[...] காக புதிய கட்டடம் [...] சலகூடம், கிணறு ஒ[...] புதிதாக அமைத்துத் [...] படி கல்வி இலா[...] வேண்டும் பிரேரணை [...] நிறைவேற்றப்பட்டது. [...]

## தேர்தலை நடத்[...]

ஊர்காவற்றுறை, [...]

வேலணை-நாரந்த[...] கிராமசபைகளின் தே[...] உரிய காலத்தில் [...] உள்ளூராட்சி அமைச்[...] தூண்டுதல் செய்[...] தீவுப்பகுதி வாலிப [...] னேற்றச் சங்கத் [...] திரு. வ. சண்முகராச[...] டுக்கோட்டை எம். [...] அமிர்தலிங்கத்தை [...] சுக்கட்சியின் செய[...] என்ற ரீதியில் [...] கொண்டார்.

## [...]காதார[...] விழா

யாழ்ப்பாண[...]

சுகாதார வார வி[...] மாதம் 25 ம் திகதி [...] கொக்குவில்ஸ்ரீராமகி[...] வித்தியாசாலை ம[...] தில் நடைபெறவிரு[...] விழாவிற்குத் திரு. [...] தரம் தலைமை வகி[...] மாணவ மாண[...] பேச்சு நாடகம் [...] பாடல் போட்[...] இடம் பெற இருக்கி[...]

## வேட்டைக்குச்சென்[...] துப்பாக்கிக்கு [...]

அனுராதபுர[...]

பன்றிவேட்டை[...] சென்ற ஒருவர், [...] வேட்டைக்குச் [...] இன்னுமொருவரால் [...] பட்டு ஸ்தலத்தி[...] மாண்ட சம்பவம் [...] இக்கிரிகொலாவை[...] யில் நேற்று மு[...] நடைபெற்றுள்ளது.

பன்றி ஒன்று ப[...] இருப்பதாகக் கருதி [...] ஒருவரைச் சுட்[...] தாக முஸ்லிம் நபர [...] மதவாச்சிப் பொலி[...] பத்தில் தெரிவித்த[...] துப்பாக்கிச்சூட்டுக்கு[...] னானவரைச் சுட[...] ஒப்புக்கொண்ட வ[...] முஸ்லிம் நபரை [...] செய்து இம்மாதம் [...] திகதிவரை விள[...] வில் வைத்துள்ளனர்[...] ராதபுர நீதிபதி மு[...] மாதம் 26-ம் திகதி [...] நபர் ஆஜர்செய்யப்ப[...]

## தீப்பிடித்து [...] மரணம்

யாழ்ப்பாணம்,

எரிகாயங்களுடன் [...] நொச்சியிலிருந்து ய[...] ணம் ஆஸ்பத்திரிக்கு [...] மப்பட்ட நாராய[...] என்பவர் நேற்று [...] தினம் மரணமானார்.

சமையலறையில் [...] உடையில் தீப்பற்[...] இவர் எரிகாயங்க[...] பட்டதாக மரண வி[...] யின்போது தெரிவிக்[...] டது.

மரணவிசாரணை [...] திரு. தா. இராச[...] எரிகாயங்களால் ஏ[...] மரணம் எனத் தீர்[...] தார். [...]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ...லூரி வளர்ச்சிக்கு ...ரணமாயிருப்பது

யாழ்ப்பாணம், சனி
...டசாலையின் வளர்ச்சி,
...ருேமினதும், ஆசிரியர்
...தும் ஒத்துழைப்பில்
...யிருக்கின்றது. குழந்
...ளின் கல்வியை வளர்ப்
... நாம் அக்கறையாக
...கவேண்டும்.
...வ்வாறு தட்டாதெரு
... தமிழ் கலவன் பாட
... பெற்றேர் ஆசிரியர்
...க்கூட்டத்திற்குதலைமை
...கிப் பேசிய திரு. எஸ்.
...சாமி குறிப்பிட்டார்.
...டசாலையின் வளர்ச்சிக்
... புதிய கட்டடம், மல
...டம், கிணறு ஒன்றும்
...ாக அமைத்துத் தரும்
... கல்வி இலாகாவை
...ண்டும் பிரேரணை ஒன்று
...றவேற்றப்பட்டது.
(ந. நி.)

## ...ர்தலை நடத்துக

...ர்காவற்றுறை, வெள்ளி
...லணை-நா ர ந் த னை க்
...மசபைகளின் தேர்தலை
... காலத்தில் நடத்த
...ளுராட்சி அமைச்சரைத்
...டுதல் செய்யுமாறு
...ப்பகுதி வாலிப முன்
...றச் சங்கத் தலைவர்
... வ. சண்முகராசா வட்
...கோட்டை எம். பி. திரு.
...ர்தலிங்கத்தை தமிழர
...ட்சியின் செயலாளர்
...ற ரீதியில் கேட்டுக்
...ண்டார்.

## ...காதாரவார விழா

யாழ்ப்பாணம், சனி
...காதார வார விழா இம்
...ம் 25 ம் திகதி மாலை
...க்குளிஸ்ரீராமகிருஷ்ண
...த்தியாசாலை மண்டபத்
... நடைபெறவிருக்கிறது
...விற்குத் திரு. கே. சுந்
... தலைமை வகிப்பார்.
...வ மாணவிகளின்
...சு நாடகம் நடனம்
...ல் போட்டிகளும்
...ம் பெற இருக்கின்றன.

## ...டைக்குசென்றவர் ...ப்பாக்கிக்கு பலி?

அனுராதபுரம், சனி
...றிவேட்டைக்குச்
...ற ஒருவர், பன்றி
...க்குச் சென்ற
...னுமொருவரால் சுடப்
... ஸ்தலத்திலேயே
...ட சம்பவம் ஒன்று
...கொலாவைப் பகுதி
... நேற்று முன்தினம்
...பெற்றுள்ளது.
...ன்றி ஒன்று பதுங்கி
...ப்பதாகக் கருதித்தாம்
...வரைச் சுட்டுவிட்ட
... முஸ்லிம் நபர் ஒருவர்
...ரச்சிப் பொலிஸ் நிலை
...தில் தெரிவித்துள்ளார்.
...பாக்கிச்சூட்டுக்குப் பலி
...வரைச் சுட்டதாக
...க்கொண்டவரான
...லிம் நபரைக்கைது
...து இம்மாதம் 26-ம்
...வரை விளக்கமறிய
... வைத்துள்ளனர். அனு
...புர நீதிபதி முன் இம்
...ம 26-ம் திகதி சந்தேக
... ஆஜர்செய்யப்படுவார்.

## ...பிடித்து பெண் மரணம்

யாழ்ப்பாணம், ஞாயிறு
...காயங்களுடன் கிளி
...ச்சியிலிருந்து யாழ்ப்பா
... ஆஸ்பத்திரிக்கு அனுப்
...ட்ட நாராயணம்மா
...வர் நேற்று முன்
...ம் மரணமானார்.
...மையலறையில் இவரது
...யில் தீப்பற்றியதால்
... எரிகாயங்களுக்குட்
...தாக மரணவிசாரணை
...போது தெரிவிக்கப்பட்
...
...ணவிசாரணை அதிகாரி
...தா. இராசநாயகம்
...யங்களால் ஏற்பட்ட
...ம் எனத் தீர்ப்பளித்
[கா. நி.]

# நெடுந்தீவு கொந்தளிப்பு கடலில் நீச்சல் போட்டி

## ஆறு பேருக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன

நெடுந்தீவு, சனி

நெடுந்தீவில் நேற்று முன் தினம் கடுங்காற்றிற்கும் கொந்தளிக்கும் கடலுக்கு மிடையே நடைபெற்ற நீச்சல்போட்டி நெடுந்தீவு துறைமுகத்திலிருந்து மேற்கே 2 மைல்களுக்கப்பால் ஆரம்பமானது. 15 நீச்சல் வீரர்கள் கலந்து கொண்ட இப்போட்டிக்கு கடற்படையினரின் இரண்டு மோட்டார் 'லோஞ்'சுகளும், மூன்று மீன்பிடி வள்ளங்களும், இயந்திரம் பூட்டிய கட்டு மரங்களும் போட்டி வீரர்களுக்கு முன்னும் பின்னும் சென்று பாதுகாப்பு அளித்தன.

கலளமுனைக்கருகாமையில் ஆரம்பமான இப்போட்டியை நெடுந்தீவு விளையாட்டுத்துறை அதிகாரி திரு. என். எஸ். முருகேச ஆரம்பித்துவைத்தார். நீச்சல் வீரர்களுக்கு ஊக்கம் கொடுப்பதற்காக மோட்டார் படகு ஒன்றில் ஒலிபெருக்கிஇணைக்கப்பட்டு இன்னிசை விருந்துகள் அளிக்கப்பட்டன. கடும் நீரோட்டத்தையும் கடல் கொந்தளிப்பையும் முறியடித்துக்கொண்டு 42 நிமிடங்களில் 2 மைல் தூரத்தையும் நீந்தி முடித்தார் நெடுந்தீவு மத்தியைச் சேர்ந்த திரு. எம். யாக்கோப்பு. நெடுந்தீவு துறைமுகத்தை வீரர்கள்வந்தடைந்ததும் வீரர்களை பெரும் திரளான மக்கள் கரகோஷத்தோடு வரவேற்ருர்கள். வெற்றிபெற்ற வீரர்களுக்கு நெடுந்தீவு மகாவித்தியாலய அதிபர் திரு. என். குருநாதன் பரிசில்களை வழங்கினுர்.

வெற்றி பெற்றேர்களின் விபரம் 1. எம். யாக்கோப்பு, 2. ரி. யேசுதாசன், 3. அ. எமிலியானஸ்பிள்ளை 4. ம. எட்வேட், 5. அ. டொமினிக், 6. எஸ். மரியதாஸ். இந்நீச்சல்போட்டியை ஏற்பாடு செய்த விளையாட்டுத் துறை அதிகாரி திரு. என். என். முருகேசு நன்றியுரை கூறினுர்.

## "ஒற்றுமை அவசியம்"

நெடுந்தீவு, சனி

"எமக்குள்ளே ஒற்றுமை இருக்குமாளுல் நாம் வகுக்கும் திட்டங்கள் யாவும் வெகு சுலபமாக செய்து முடித்துவிடலாம். இஸ்ரேவேல் நாடு ஒருசிறிய, பாலைவனத்தில் அமைந்திருக்கும் நாடாகும். அங்குள்ள மக்களின் ஒற்றுமைகாரணமாக பெரும் முன்னேற்றத்தை இன்று அடைந்துள்ளார்கள்."

இவ்வாறு நெடுந்தீவு கிராமமுன்னேற்ற அதிகாரி திரு. எஸ். தேவசகாயம் நெடுந்தீவு மத்தி கிராம முன்னேற்றச் சங்க வருடாந்த பொதுக்கூட்டத்தில் பேசுகையில் கூறினுர்.

நடப்பு வருட உத்தியோகஸ்தர்களாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர். தலைவர்: திரு. அ. மரியான் உபதலைவர்: திரு. நீ சுவாம்பிள்ளை, செயலாளன்: திரு. யோ. கொன்ஸ்ரன்ஸ், உபசெயலாளர்: திரு. யோ. மரியதாஸ், பொருளாளர்: திரு. பரிஞந்து. கணக்குப்பரிசோதகர்: நீ செதேயு 15 பேர் கொண்ட நிர்வாகசபையினரும் 10 பேர் கொண்ட தொண்டர்படையும் 5 பேர் கொண்ட சமாதன சபையும் தெரிவுசெய்யப்பட்டது.

## கல்வியும் உணவும்

### அரசாங்க அதிபர் பேச்சு

யாழ்ப்பாணம், ஞாயிறு

"கல்வி வளர்ச்சிக்கு கைகொடுக்க பெரியோர்கள் முன்வரவேண்டும். அத்துடன் உணவு உற்பத்தியைப் பெருக்குவதில் எல்லோரும் கவனம் எடுத்தால் எமது நாடு முன்னேறும் என்பதில் ஐயமில்லை.

இவ்வாறு அம்பலவாணர் அனுதை ஆச்சிரமத்திற்கு அடிக்கல் நாட்டி வைத்து உரையாற்றிய போது வடமாகாண அரசாங்க அதிபர் திரு. வேணன் அபயசேகரா குறிப்பிட்டார்.

மாவட்ட உதவி சமூக சேவை அதிபர் திரு. என். சிவசிதம்பரம் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் திரு. வேணன் அபயசேகரா தொடர்ந்து பேசுகையில், "நல்ல முறையில் இந்த அனுதை ஆச்சிரமத்தைக் கட்டி முடிக்க மக்கள் ஒத்துழைப்பு அவசியம். வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவது மாத்திரம் திட்டத்தின் பணியல்ல. பொருளாதாரத்திற்கு தெம்பு ஊட்டி, அதன் மூலம் நல் வாழ்வும் அறிவுச் சாதனைகளும் உயர்ந்து கொண்டு போவதற்கு திட்டம் வழிசெய்ய வேண்டும். சமுதாயத்தின் உற்பத்திச் சக்தியைப் பெருக்கி அதன் மூலம் சமுதாயத்தின் பல்வேறு சக்திகளும் சிருஷ்டித் துடிப்புகளும் வெளிவந்து செயல் படுவதற்கு ஏற்ற சூழ்நிலையைத் தோற்றுவிக்க வேண்டும் என்று கூறினுர்

யாழ்ப்பாணம் இறைவரி உத்தியோகத்தர் திரு. ஏச். சி. பிள்ளைநாயகம், கோப்பாய் இறைவரி உத்தியோகத்தர் திரு. வி. கந்தப்பிள்ளை ஆகியோர் உரையாற்றினர். [ந. நி]

## ஆலயப்பிர...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

குருக்கள் தலைமையில் இக் கூட்டம் நடைபெற்றது.

மாவை கந்தன் ஆலயப்பிரவேச விஷயம் இக்கோவிலை அடுத்துள்ள பொதுமக்களைச் சார்ந்ததென்றும் வேதசிவாகமங்களைக் காட்டியோ அல்லது சான்றுகள் பகர்ந்தோ அந்தணர்கள் இனி இவ்விஷயத்தில் செய்வதொன்றுமில்லையென்றும் பழமையின் சித்தாந்தத்திலே ஊறிய மக்கள் தேச வழமையாக வந்த ஓர் விஷயத்தை திர ஆராய்ந்து காலத்திற்கேற்ற கொள்கைகளை நிலை நாட்ட கால அவகாசம் வேண்டுமென்றும் ஆகவே இவ்விடயம் சம்பந்தமாக பொது மக்கள் கூடி எதனை முடிவாக்குகிருர்களோ அதைவிட சிறந்த வழி வேறு இல்லை. என்றும் ஸ்ரீ து. சண்முகநாதக் குருக்கள் தலைமையுரையில் கூறினுர்.

சிறுபான்மைத் தமிழர் உட்சேல்லும் ஆலய அர்ச்சகர்கள் இக் கோவில்களில் அர்ச்சிப்பதற்கு அனுமதியளிக்கிறீர்களா? அப்படியென்ருல் உங்கள் கோவில்களில் மாசு ஏற்பட்டு விடுமோ? என்ற கேள்விக்கு அப்படியானவர்களை இங்கு அனுமதிப்பதில்லை எனப்பதிலளிக்கப்பட்டது.

மற்றும் பலதரப்பட்ட விஷயங்கள் பற்றியும் கருத்துப்பரிவர்த்தனை நடைபெற்றது.

ஜூலை முதலாம் திகதி கொடியேற்றம் ஆரம்பமாக விருப்பதால் ... நடைபெறும் திருவிழாக்க...

# ஐயாறன் எழுதுவது

கோவிலுக்குப் போகும் வழக்கத்தை எதிர்க்க கேரளத்திலே மாக்ஸிய வாலிய அணியினர் 'கலாசார புரட்சி' என்ற பெயரால் முன் வந்துள்ளதாக சென்னை 'ஹிந்து' பத்திரிகையில் ஒரு செய்தி வெளியாகியுள்ளது.

சபரிமலையிலே ஐயப்ப சுவாமியை தரிசிக்க மார்க்ஸிய கட்சி மெம்பர்களும் யாத்திரை செய்வதை, கட்சிக் காரியதரிசி ஏ. கே. கோபாலன் பரிகசித்தார். கட்சி யூனியாம் உடைக்குப் பணம் கொடுக்கமுடியவில்லையென்று கூறுபவர்கள், சபரிமலையாத்திரைக்குரூ. 50 அல்லது 60 வரை செலவு செய்ய ஏது பணம் என்று அவர் கேட்டதாயும், இதனுல் அக்கட்சியைச் சேர்ந்தவர்களில் சிலர் மனம் நொந்து, 'ஜனசங்' கட்சியில் சேர்ந்ததாயும் அச் செய்தி தெரிவிக்கிறது.

ஃ ஃ ஃ

சாதாரணமாக மதுரை, பழநி, திருப்பதிமுதலியஸ்தலங்களிலே கோவிலுக்கு தினசரிஏராளமானவர்கள்வருவதைக்காணலாம். அவர்களில் பெரும்பாலோரும் வெளிஊர்க்காரர்களே யாத்திரைக்காக வருபவர்களே அதிகம். பலகோவில்களுக்கு திருவிழாக் காலத்தைத் தவிர வேறு நாட்களில் அந்தந்த ஊர்மக்கள் செல்லுவது மிகவும் குறைவு. பல கோவில்கள் ஜன நடமாட்டமின்றி, விளக்கும் ஏற்றப்படாமல், வௌவால்கள் வாசம் செய்வதைப்பார்க்கலாம்.

யாரும் பிரசாரம் செய்ய வேண்டிய அவசியமில்லாமலேயே, கோவில்களுக்குச் செல்லும் வழக்கம் மக்களிடையே பெரிதும் குறைந்துள்ளதைப் பார்க்கலாம்.

ஏன்? கைமேல் ஏதும் பயன் இருந்தாலே மக்கள் அதைச் செய்வர்.

"நிலைபெறுமாறு எண்ணுதியேல் நெஞ்சே நீவா நித்தலும் எம்பெருமானுடைய கோவில் புக்கு..." என்ற அப்பர் சுவாமிகளின் திருத்தாண்டகத்தைப் பல சைவர்கள் பாடக்கேட்கிருேம். அப்படிப் பாடுகிறவர்களில் எவ்வளவு பேர், நித்தலும் எம்பெருமானுமானுடைய கோவிலுக்குப் போகிருர்கள்? போகாமைக்கு அதற்குக் காரணமென்ன?

இதைச் சற்றே, ஆராய்ந்தால், சமூகத்தின் உயிர் நிலையமான கோவில்களில் பல மக்களுக்குத் தேவையான பயனை அளிக்கவில்லை என்பது தெரியும். பசித்தவர்களுக்கு இலவசமாக உணவு அளிப்பது, உடை, மருந்து, கல்வி ஆகியஎல்லாம் இலவசமாகமக்களுக்குஅளிக்கவே கோவில்களைப் பெரிய அளவில் கட்டிவைத்தனர். கோவில்களில் கலை நிகழ்ச்சிகள் அடிக்கடி நடந்து மக்களுக்கு நல்ல பொழுது போக்குக்கு வகைசெய்யும்.

இப்பொழுப் பணிகளைக் கோவில்கள் செய்யுமென்றே பலர் கோவில்களுக்குப் பல சொத்துக்களையும் எழுதி வைத்தனர். ஆனுல் காலப் போக்கிலே இந்தப் பணிகளெல்லாம் மறைந்துவிட்டதால், மக்கள் கோவிலுக்குச் செல்லும் பழக்கமும் குறைந்துவிட்டதில் வியப்பென்ன?

பெரும் செலவில் கோவில் திருப்பணிகளைச் செய்கின்ருேம். ஆனுல் அக்கோவில்களை ஊர் மக்கள் பூரணமாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டாமா? இல்லாவிட்டால் கோவில்களைக் கட்டியும் என்ன பயன். ஆறு காலமும் மணி அடித்துக் கதவை மூடிவிடுவதற்குத்தானு கோவில் கட்டினுர்கள்? சமூகத்தின் தேவைகளைக் கடவுளின் பெயரால் மேலான முறையில் பூர்த்தி செய்துவந்தனர்.

இன்று அரசாங்கமே சமூகத்தின் தேவைகளை எல்லாம் கவனிக்கவேண்டும் என்று சொல்லுகின்றனர். ஆனுல் அரசாங்கத்தால் இதைச் சரிவரச்செய்யமுடிகிறதா? முடியுமா?

கோவிலுக்குச் செல்ல வேண்டாமென்று பிரசாரம் செய்பவர்கள்மீது நம்மில் பலருக்கு ஆத்திரம்வரலாம். ஆனுல் கோவிலுக்கு மக்கள் ஆவலுடன் செல்லத்தக்க வகையில் பயனுள்ள சமூகப் பணிகளை கோவில்கள் மூலம் செய்ய, யார் முன்வருகிருர்கள்?

ஃ ஃ ஃ

நிலைபெறுமாறு எண்ணுதியேல் நெஞ்சே நீவா,
நித்தலும் எம்பிரானுடைய கோவில் புகுப்,
புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்குமிட்டுப் பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்,
தலையாரக் கும்பிட்டுக் கூத்துமாடிச் சங்கரா சய போற்றி போற்றியென்றும்,
அலை புனல்சேர் செஞ்சடையெம் ஆதியென்றும் ஆரூரா என்றென்றே அலறு நில்லே.

—அப்பர் சுவாமிகள்.

# சிதம்பரம்ஜெயராமன் வரவில்லை

கொழும்பு, சனி

நேற்று தியாகராஜ கான சமாஜ இசை விழாவில் கலந்துகொள்வதற்காக வரவிருந்த சிதம்பரம் சி. எஸ். ஜெயராமன் நேற்று முன் தினம் வரவில்லை. இவருக்கு விஸா கொடுக்கமறுக்கப் பட்டுவிட்டதாம். பாடி சம்பாதிப்பதற்காக வருகிருரென திரு. ஜெயராமனுக்கு எதிராக தந்திகள் சென்றதைத் தொடர்ந்தே இவருக்கு இலங்கை வர விஸாகொடுக்க மறுக்கப் பட்டதாகத் தகவல் கிடைத்துள்ளதாம்.

சிதம்பரம் ஜெயராமன் நேற்று இசைவிழாவுக்கு தலைமை வகிப்பதாக இருந்தது. செனட்டர் மீ நீதிராசா இவருக்குப் பதிலாக இசைவிழாவை ஆரம்பித்து வைத்தார்.

சிதம்பரம் ஜெயராமன் 'சம்பாதிக்கவரவில்லை, விழாவில் கலந்து கொள்வதற்காகவே வருகிருர்' எனத் தந்திகள் இங்கிருந்து சென்றுள்ளன. அவரை அழைப்பதற்கான முயற்சிகளும் நடைபெறுகின்றன.

## மாவிட்டபுரம்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

தெரிவித்தார். ஆலயத்துக்குள் செல்பவர்களானுலும் சரி, ஆலயத்திற்குள் நிற்பவர்களானுலும்சரி அமைதிக்குப் பங்கம் ஏற்படுத்தக் கூடியமுறையில் எவர் நடந்துகொண்டாலும் அவர்கள் மீது பொலிசார் நடவடிக்கை எடுக்கத்தயங்கமாட்டார்களென்றும் திரு. சுந்தரலிங்கம் கூறினுர்.

ஆலயப்பிரவேசம் என்ற பெயரில் குழப்பம் செய்து அமைதிக்குப பங்கம் ஏற்படுத்த எவர் முயன்ருலும் அதற்குப் பொலிசார் இடம் கொடுக்க மாட்டார்களென்றும் அவர் சொன்னுர்.

விலும் அமைதி ... நிலை... நாட்ட ... ... படை நிறுவப்பட்டது.

## "நிரந்தரமாக்குக"

யாழ்ப்பாணம், ஞாயிறு

சீமெந்துத் தொழிற்சாலையில் பல வருடங்களாக தற்காலிகமாக வேலை செய்துவரும் ஊழியர்களை இதுவரை நிரந்தர ஊழியர்களாக்கவில்லையாம். இவர்களை தொழிற்சாலையில் நிரந்தர ஊழியர்களாக்கும்படி ஒரு மகஜரை தெல்லிப்பளை தமிழரசுக்கட்சிச் செயலாளர் திரு. கே. சிவபால சுந்தரம் உள்ளூராட்சி அமைச்சர் திரு. எம். திருச்செல்வத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். [ந. நி]

## பெற்றோர் ஆசிரியர் சங்கம்

ஊர்காவற்றுறை வெள்ளி

வடக்கு- நாரந்தனை ஸ்ரீ கணேச வித்தியாசாலைப் பெற்றோர் ஆசிரியர் சங்கக் கூட்டம் அண்மையில்நடைபெற்றது.

இக் கூட்டத்தில் மேற்படி பாடசாலையில் நாற்பது வருடங்களாக ஆசிரிய சேவை புரிந்த திருமதி செல்லமுத்து மாணிக்கம் ஒய்வு பெற விரும்புவதை முன்னிட்டு அன்னருக்கு 'பாராட்டுவிழா' நடத்த வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது.

## கப்பல் மாலுமிக்கு 960 ரூ. அபராதம்

திருக்கோணமலை, சனி

திருக்கோணமலைத் துறைமுகத்தில் இறக்குமதிக்காக வந்து தங்கிநிற்கும் சரக்குக் கப்பல் என்ஜின் மாலுமி ஒருவர் தமது கைவசம் 8 கடிகாரங்களை, சுங்க இலாகாவுக்குத் தெரியப்படுத்தாமல் வைத்திருந்ததால் உதவி சுங்க கலெக்டரான உதவி அரசாங்க அதிபர் திரு. எம். சோமசுந்தரம் சம்பந்தப்பட்ட மாலுமிக்கு 950 ரூபா அபராதம் விதித்துள்ளதாக தெரியவருகிறது. பிரஸ்தாப கப்பலில் சுங்கஇலாகா உத்தியோகத்தருக்குத் தெரியாமல் கைக்கடிகாரங்கள் விற்பனையாகின்றன என்று கிடைத்த புகாரைத் தொடர்ந்து சுங்க இலாகா தடுப்பு அதிகாரி உடனடியாக எடுத்த நடவடிக்கையின் காரணமாக இந்தக்களவு அவரால் கையும்மெய்யுமாகக் கண்டுபிடிக்கப்பட்டது என அறியப்படுகிறது.

ஃ ஃ ஃ

திருக்கோணமலை துறைமுக (சரக்குக்) கூட்டுத் தாபனத்தைச் சேர்ந்த 200க்கு மேலான தொழிலாளிகள் சென்ற ஒருவாரமாக வேலை நிறுத்தம் செய்து வருகின்றனர். இதனுல் திருகோணமலை தேயிலை நிர்வாக ஸ்தாபனக்களஞ்சிய அறைகளில் 52,910 பெட்டிகளிலடங்கிய தேயிலை ஏற்றுமதியாக்கப்படாமல் ஸ்தம்பித்துக் கிடக்கின்றது. இங்குதேயிலை ஏற்றுமதிக்கென வந்த 4 கப்பல்கள் இந்நிலைமை காரணமாக ஏற்றுமதியின்றி கொழும்புக்கு திருப்பி அனுப்பப்பட்டுள்ளன

தற்போது வேலைநிறுத்தம் செய்யும் தொழிலாளிகள் இலங்கை தொழிற்சங்க மேளனத்தைச் சேர்ந்தவர்களென்றும் 120சம்பள முற்பணத்துக்காக வேலைநிறுத்தம் செய்கிருர்களென்றும் தெரிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






பாயும் குதிரைப் பொம்மை பதிக்
பக்கத் திருக்கும் உஷாஜினி நின்
தூய முகத்தில் அமைதியெழில்
துலங்கும் காரணம் எதுவாமோ?
ஆய கலைகள் பலகற்று
அறிஞர் பெரியோர் மனமுற்று
தாயர் தந்தை பெருமைபெற
தகுந்த வழியைக் கண்டாமோ?

படம்: அரியாலையூர் உஷாஜினி கிருஷ்ணசாமி

ஒருபடி உயர்வோமா—4

# கடமை

—கணேஷ்—

ஒவ்வொருவருக்கும் அவரவர் ஆற்றவேண்டிய பொறுப்பு ஒன்று இருக்கின்றது. இதனை நாம் அசட்டை செய்வது நமது வருங்காலத்தை நமது எதிர்காலத்தைச் சிதறடித்துவிடும். நமக்கிருக்கும் பொறுப்பை நாம் தீர்க்கமாக, விரிவாக ஆராய்ந்து செயற்படவேண்டும்.

கடமையுணர்வு நம்முள் ஊறிவிட்டால் நாம் செயல் வீரர்களாகத் திகழ, அது வழிவகுக்கும். பொறுப்புள்ள மனிதர்களாக நாம் உருவாகி வளர நம்முள்ளே ஊறும் கடமை உணர்ச்சி நமக்கு உதவும்.

பாடசாலையில் நமக்கொரு கடமையிருக்கிறது. வீட்டில் நமக்கொரு கடமையிருக்கிறது. நமது சமுதாயத்துக்கு நாம் ஆற்றவேண்டிய பங்கு, கடமை, பணியிருக்கிறது. இந்த மூன்று கடமைகளையும் நாம் இளமையிலிருந்தே சிறப்பாக நிறைவேற்ற, சீராக நிறைவேற்ற நாம் நம்மைப் பக்குவப்படுத்திக் கொள்ள வேண்டும்.

எதையும் வேண்டா வெறுப்பாக எடுத்துக்கொள்ளாமல் நல்லவற்றில் பூரண அக்கறையோடு பொறுப்போடு நாம் செய்ய முன்வரவேண்டும். இவ்வித பழக்கம் நம்மைப் பொறுப்புள்ளவர்களாகப் பிறர் நம்மைப் பார்த்து மதிக்கக் கூடியதாகக் கணிக்கக்கூடியதாக ஆக்கும். இந்த நிலை சமுதாயத்தில் நமக்கென ஒரு தனியான இடத்தைத் தேடித்தரும். கடமையுணர்வுகொண்ட நம்மிடம் மதிப்பு மிக்க பொறுப்புக்களை ஒப்படைக்கப் பலர் விரும்புவர். இதனால் நமது மதிப்பு, நமதுநிலை வளர்ந்து உயரும்.

நாம் ஆற்றவேண்டிய கடமைகளைத் தட்டிக்கழித்துவிடாமல், உதாசீனப்படுத்தாமல் பக்குவமாக தம்மாலான திறமையுடன் சீராக ஆற்றப் பெருமுயற்சி மேற்கொள்வோம். நாம் இருக்கும் நிலையில் நமது கடமையில் கண்ணுங்கருத்துமாயிருந்து முழுமையாக அதனைச் செய்ய [illegible] செய்வோம்.

பிறர் செய்யட்டும், பிறகு நாம் செய்வோம் என்று பின்வாங்காது நமது கடமை நாம் ஆற்றவேண்டிய பொறுப்பு என்ன என்பதை நாமே விரிவாக ஆராய்வாக்ச் சிந்தித்து நமது கடமையை ஒரு சிறிதளவேனும் தவறவிடாது செய்ய முற்சிக்கொள்வோம், விரைவோம். நமது எதிர்காலச் [illegible] கடமையுணர்வு [illegible] கொள்ளும்.




## பொறுக்கிய முத்து

சிறுவர்களை என்னிடத்தில் வர விடுங்கள். ஏனெனில் பரலோக ராச்சியம் அவர்களுடையது.

— யேசுநாதர்

## அறிவை அளவிடுங்கள்

O மிக உரமான பறவை யாது?
நீக்கோழி

O உலகில் நீண்ட ஆறு யாது?
மிசூறி மிசிசிப்பி

O கிருமியன் போர் சம்பந்தப்பட்ட பெண் யார்?
புளோரன்ஸ் நைட்டிங்கேள்

O பிலிப்பைன் தீவுக்கூட்டத்தில் எத்தனை தீவுகள் வரையுள்ளன?
7075 வரையில்

O பாரசீகரின் தெய்வம் யாது?
நெருப்பு

O இருதயத்தின் இரத்தம் உடலில் பரவுவதைக் கண்டு பிடித்தவர் யார்?
டாக்டர் வில்லியம் ஹார்வி

O செஸ் (Chess) விளையாட்டு எந்நாட்டில் ஆரம்பிக்கப்பட்டது?
இந்தியாவில்

O இரத்தக்கறையை அகற்ற உபயோகிக்கப்படும் பொருள் யாது?
ஆமோனியா

அனுப்பியவர்
இரகுநாதன்
[அங்கத்தவர் இல. 26]

## பரிசுப் போட்டி-2

நிச்சயமாக

அடுத்த வாரம்

ஏமாற்றமாட்டோம்

## மாணவர் மலர் அங்கத்தவர்கள்

[36] சிவானந்தன் பஞ்சாட்டரசர்மா, புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி, [37] இராமலிங்கம் புவனேஸ்வரி, கச்சாய் அரசினர் வித்தியாலயம், [38] வ. ஸ்ரீகாந்த சர்மா, சுழிபுரம் விக்டோரியா கல்லூரி, [39] வசந்தா ஆறுமுகம், உடுவில் மகளிர் கல்லூரி. [40] ம. ஜெயராசன், யாழ் மத்திய கல்லூரி, [41] சி இசசெல்லப் பூவையர்க்கரசி, மானிப்பாய் மெம்மோறியல் கல்லூரி [42] ரி. ஆர். மகேஸ்வரன் இளவாலை அர்ச். ஹென்றி கல்லூரி, [43] கமலறஞ்சினி ஜயாத்துரை, சண்டிக்குழி மகளிர் கல்லூரி, [44] சு. உதயக்குமார், யாழ். சென். ஜேன்ஸ், [45] ச. க. சுந்தரலிங்கம், அனலைதீவு சதாசிவ ஆங்கிலப் பாடசாலை.

## பார்வையற்றவர்களுக்கு ஒரு பூங்கா!

வியற்னா நகரத்தில் "வெர்தெம்ஸ்டன் பார்க்" என்றோர் அழகான பூங்கா இருக்கிறது. இதன் ஒரு பகுதியைக் கண் இல்லாதவர்களுக்கென்றே நிர்மானித்திருக்கிறார்கள். ஒன்றரை ஏக்கர் பரப்பளவுள்ள அந்தப் பூங்காவில் பார்வையற்றவர்கள் நறுமலர்களின் மணத்தை நுகரலாம், அவற்றின் மென்மையைக் கரங்களால் தொட்டு உணரலாம். அருவியின் 'சோ' என்ற வீழ்ச்சியைக் கேட்டு ரஸிக்கலாம். பட்சி ஜாலங்களின் இன்னிசையைக் காது குளிரக்கேட்டு மகிழலாம். இதற்காகவே அங்கு இன்னிசை பொழியும் பறவைகளை வளர்க்கிறார்கள். செயற்கை அருவிகள் உருவாக்கி இருக்கிறார்கள்.

பல நாடுகளில் இருந்தும் பார்வையற்றவர்கள் இங்கு வருகிறார்கள்.

அவர்கள் இந்தக் கோட்டத்தின் வாயிலிலிருந்து உள்ளே போக எளிதாக இருக்கும்படி பாதை அமைக்கப்பட்டுள்ளது. பூங்காவின் முகப்பில் அதன் வரைபடம் ஒன்று இருக்கிறது. அதில் குருடர்கள் படிக்க எளிதாக 'பிரெய்லி' எழுத்துக்களில் விளக்கம் இருக்கிறது. உள்ளே உள்ள பூச்செடிகளெல்லாம், அவைகளின் பெயர்கள் 'பிரெய்லி' எழுத்துக்களில் தான் எழுதி வைக்கப்பட்டுள்ளன. குருடர்கள் சுலபமாகத் தங்கள் கைகளில் எடுத்துக்கொஞ்சி மகிழ்வதற்காக அங்கே பழக்கப்பட்ட முயல்களும், ஆட்டுக் குட்டிகளும் உலாவுகின்றன; இங்கே குருடர்களுக்காக பட்டுப் போன்ற புல்தரையும். 'பிரெய்லி, எழுத்துப் புத்தகங்கள் கொண்ட சிறு புத்தகசாலையும் உண்டு.

தகவல்;- ச. ஜெயா
(அங். இல. 56)

## உங்களுக்கு தெரியுமா?

**பறக்கும் ரயில்!** இங்கிலாந்தில் மணிக்கு 500மைல் வேகமுள்ள புகைவண்டியைச் செய்துவருகின்றனர். இதற்குச்சக்கரங்கள் இல்லை. இரும்புப் பாதைக்கு மேல் சிறிது உயரத்தில் பறந்து செல்லுமாம் புகைவண்டி!

**அதிசயப்பேனா!** அமெரிக்காவில் அதிசயப்பேனாஒன்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இப்பேனாவிலுள்ள மை தீர்ந்துவிட்டால் மீண்டும் மை வேண்டியதில்லை, நீரை நிரப்பினால் அது மையாக மாறிவிடும்.

**கடிதத்தின் பெறுமதி!** வின்ஸ்டன் சர்ச்சில் 1936-ம் ஆண்டு தமது மகளுக்கு எழுதிய கடிதம் நியூயோர்க்கில் 250 டொலராக ஏலத்தில் விலைபோனது. இக்கடிதத்தில் அவசரப்பட்டுத்திருமணம் செய்யவேண்டாமென எழுதியிருந்தார் சர்ச்சில்.

**பாம்பு விஷம்!** இன்னும் சில வருடங்களில் தங்கத்திலும் பார்க்கப் பாம்பின் விஷத்துக்கு அதிக கிராக்கி ஏற்படுமாம். இத்தகவல் இந்திய விஞ்ஞானிகள் மகாநாட்டில் தெரிவிக்கப்பட்டது. புற்றுநோய் போன்ற கொடிய வியாதிகளுக்குப்பாம்பின் விஷமும் பயன்படுகிறதாம்.

**பிள்ளைகள் தொல்லை!** தென்அமெரிக்காவில் பிரேசில்நாட்டில் கரூபா— மரியா தம்பதிகளுக்குத் தம் பிள்ளைகளால் பெருந்தொல்லை ஏற்படுகிறதாம். மொத்தம் 32 பிள்ளைகளில் 7 இறந்துவிட்டன. எஞ்சிய 25 பிள்ளைகளின் பெயர்களைக்கூட நினைவில் வைத்திருப்பதுவும் கஷ்டமாயிருக்கிறதாம். பெற்றோர் 25 பிள்ளைகளின் புகைப்படங்கள் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டனவாம்.

சேகரிப்பு: இ. வேர்ஜுட்

## அமுத மொழி

அமுத மென்றொரு மொழியடா
அழகு தமிழென்று விளியடா!
இமயம் வென்ற புகழடா
இன்றும் இளமை எழிலடா!

முன்னவர் வளர்த்த மொழியடா
முடிசோன் வேந்தர் விழியடா!
கன்னல் போன்ற சுவையடா
கருத்தேடு கொண்டபொற் குவையடா!

இயலிசை நாடகமுப் பிரிவடா
இன்பத் தமிழின் உயிரடா!
பயில்வது நாவுக் கெளிதடா
பாரினில் நால் வளர் மொழியடா!

— கருணை யோகன்
(அங். இல. 21)

## 'மாணவர்மலர்' அங்கத்தவர் பத்திரம்

பெயர்: ____________________

வயது: ____________________

பாடசாலை: ____________________

முகவரி: ____________________

____________________

வகுப்புஆசிரியர் கையொப்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

**ஞாயிறு 23-6-68**

செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.

**344 மீற்றர் அல் 61 மீற்றர்**

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவநற்சிந்தனை, 6-40 கிறிஸ்தவ நற்சிந்தனை, 6-45 ஆதிப் பாடல்கள், 7-25 தினக்குறிப்பு, 7-30 குரல்வளை, 8-00 இசைவேளை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

**344 மீற்றர் அல் 49 மீற்றர்**

பகல் 12-00 தொழிலாளர் வேளை, 1-00 மாதர் கேட்டவை.

5-15 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 ஒடி விளையாடு பாப்பா.

**344 மீற்றர் அல் 61 மீற்றர்**

இரவு 5-15 நாடோடிப் பாடல்கள், 6-15 ஞான மஞ்சரி, 7-30 பாட்டு—கே. வி. தம்பு, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 இசைக் கச்சேரி.—பி. எஸ். ஆறுமுகம்பிள்ளை.

## புது உறுப்பினர்

நல்லூர், சனி

யாழ். தொழில் நுட்ப நிலையத்தின் வணிக மாணவ மன்ற புதுவருட நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

போஷகர்: திரு கே. நாகலிங்கம், (கல்லூரி அதிபர்), தலைவர்: திரு. சி. என். செல்வராஜா, உபதலைவர்: திரு மு. சி. ஸ்ரீதயாளன், செயலாளர்: திரு. வை. தஹராஜா, உபசெயலாளர்: திரு. வி. பிரமேஸ்வரசர்மா, பொருளாளர்: திரு. எஸ். மகேந்திரநாதன்

சைவமன்ற உறுப்பினர் வருமாறு:-

போஷகர்: திரு. கே. நாகலிங்கம், தலைவர்- திரு சு. பத்மானந்தன், உபதலைவர்: திரு. சி. சுந்தரலிங்கம், காரியதரிசி: திரு. கா. திருக்கேசன், பொருளாளர்: திரு. சி. வைத்தீஸ்வரன்.

### நெடுங்கேணி கி. ச. தேர்தல்

# போட்டியின்றி எட்டுப்பேர் தெரிவு

வவனியா, சனி

நேற்று முன்தினம் நடைபெற்ற நெடுங்கேணி கிராமசபைத் தேர்தலில் 8 பேர் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டனர். 15 வட்டாரங்களைக்கொண்ட இக் கிராமசபைத் தேர்தல் முடிவுகள் வருமாறு:

போட்டி நடைபெற்ற வட்டாரங்களில் வெற்றி பெற்றவர்கள்:-

1-ம் வட்டாரம்: திரு. கி. உ. வல்லிபுரம். 2-ம் வட்டாரம்- திரு. ச. தியாகராசா. 3-ம் வட்டாரம் திரு பி. இரத்தினம். 5-ம் வட்டாரம்- திரு. பி. சிதம்பரப்பிள்ளை. 9-ம் வட்டாரம்: திரு. எ. தம்பிமுத்து. 11-ம் வட்டாரம்: திரு. கே. கணபதிப்பிள்ளை.

போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டவர்கள்:-

4-ம் வட்டாரம்: திரு. என். நாகலிங்கம். 6-ம் வட்டாரம்: திரு. வி. அமரசிங்கம். 7-ம்வட்டாரம்: திரு. மு சுப்பையா 8-ம் வட்டாரம்: திரு. என். காசி. 10-ம் வட்டாரம்:- திரு. வி. செல்லையா. 12-ம் வட்டாரம்: திரு. என். சேனாதிராசா. 14-ம் வட்டாரம்: வி. விஜிசித்தம்பி. 15-ம் வட்டாரம்: திரு வ. செல்வன்.

## கனகராயன்குளம் கி. ச. தேர்தல் முடிவுகள்

வவனியா, சனி

நேற்று முன்தினம் நடைபெற்ற வவனியா கனகராயன் குளம் கிராமசபைத் தேர்தலின் முடிவுகள் வருமாறு:

1-ம் வட்டாரம்: திரு ம சுதிரவேலு, 2-ம்வட்டாரம்: மு சிறுத தொண்டன் (போட்டியில்லை), 3-ம் வட்டாரம்: திரு க நடராசா, (போட்டியின்றி), 4-ம் வட்டாரம்: திரு வ பரராசசிங்கம் (போட்டியில்லை) 5-ம் வட்டாரம்: திரு இ கணபதிப்பிள்ளை, 6-ம் வட்டாரம்: திரு நா பொன்னையா, 7-ம் வட்டாரம்: திரு இ தங்கராசா, 8-ம் வட்டாரம்: திரு இ அப்புத்துரை, (போட்டியில்லை), 9-ம் வட்டாரம்: வி சச்சிதானந்தன்.

## ஓமந்தை கி. ச. தேர்தல் முடிவுகள்

நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஓமந்தைக் கிராம சபைத்தேர்தலில் 7 வட்டாரங்களில் போட்டியிருக்கவில்லை. 14 வட்டாரங்களைகொண்ட இத்தேர்தலின் முடிவுகள் வருமாறு:—

போட்டி நடைபெற்றவட்டாரங்களில் வெற்றி பெற்றோர்கள்: 1-ம் வட்டாரம் திரு வே தாரணியம், 5-ம் வட்டாரம் திரு க வீரவாகு, 9-ம் வட்டாரம் திரு க நாகமணி, 10-ம் வட்டாரம் திரு க நல்லதம்பி, 11-ம் வட்டாரம் திரு வ சுப்பிரமணியம், 12-ம் வட்டாரம் திரு க சிவகுரு, 14-ம் வட்டாரம் திரு வே சிதம்பரம்பிள்ளை.

போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டோர் விபரம்: 2-ம் வட்டாரம் எஸ் செல்வரத்தினம். 3-ம் வட்டாரம் செ வன்னியசிங்கம், 4-ம் வட்டாரம் கே தம்பையா, 6-ம் வட்டாரம் ஐ கனகசபை, 7ம் வட்டாரம் கே சுப்பிரமணியம், 8ம் வட்டாரம் வே செல்லையா, 13ம் வட்டாரம் தி . . . . . .




இதோ அதன் ஈடிணையற்ற சிறப்பம்சங்கள்! இந்த உன்னத அம்சங்களை ஒப்பிட்டுப் பார்த்து, இன்றே எஸ்-லோனை உங்கள் உபயோகத்துக்குத் தேர்ந்தெடுங்கள்!

1. சிதைவடையாதது 2. இறகுக் கனமுடையது

3. நொடியில் பொருத்தக்கூடியது

நீடித்துழைக்கவென்றே தயாரானது இந்தக் குழாய். கிரமமாக மாற்ற வேண்டியதில்லை. உலோகக் குழாயை விட ஐந்தில் ஒரு பங்கு கனமுள்ளதாகையால் இறகுக் கனமுடையதெனப் புகழ் பெறுவது எஸ-லோன். அதன் இடப் பரிமாற்றச் செலவு மிகச் சொற்பம் விரைவாயும் இலகுவாயும் இதைப் பொருத்தலாம். பெரிய வேலைக் குழுக்கள் தேவையேயில்லை.

4. எஃகின் உறுதியுடையது

5. அரிப்புக்குள்ளாகாதது 6. நஞ்சேறாதது

அழுக்கம் இந்தக் குழாயை அசைக்கவே முடியாது எவ்வளவு கடும் உழைப்புக்கும் இது ஈடு கொடுத்து நிற்கும். இதிற் கறள் பிடியாது. இதைத் துப்புரவு செய்ய வேண்டியதில்லை. அரிப்பூட்டும் ரசாயன மருந்துகள் இதைப் பாதிக்க மாட்டா. எஸ-லோன் குழாய்களில் பாயும் தண்ணீரில் ஒருபோதும் நஞ்சேறாது.

7. கால நிலைப் பாதிப்பற்றது

8. மின் அதிர்ச்சிப் பாதிப்பற்றது

இது, கடும் வெய்யில், மழை, பருவக் காற்றுத்தாக்குதலை எதிர்த்து நிற்பது. எஸ்-லோனின் விசேஷ மின் காப்புப் பண்பு காரணமாக மின்கம்பிக் காப்பு வேலைகளுக்கு அரசாங்க அங்கீகாரம் பெற்ற குழாய் இது.

9. சிக்கனமானது 10. துணை உறுப்புகள் கொண்டது

பிற தேவைகளுக்குப் பணத்தை மீதப்படுத்தித்தரும் நீண்ட காலப் பெறுமதியை வழங்குகிறது இது. எல்லாத் தேவைகளையும் பூர்த்தி செய்யும் 300-க்கு மேற்பட்ட விரிந்தளவான துணை உறுப்புகள் கொண்டது.

**S-lon**

எஸ்-லோன் — குழாய்த் தொழிலில் அதி சிறந்த இலவச தொழில் நுட்ப ஆலோசனையினதும் சேவையினதும் ஆதாரம் கொண்டது.

**மகாராஜா ஆர்கனைசேஷன் லிமிட்டெட்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவிட்டபுரம் குருக்கள் பிரதமருக்கு கோரிக்கை

யாழ்ப்பாணம், சனி

ஆகம விதிப்படி பலகாலமாக நடைபெற்று வரும் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலுக்குள் பலவந்தமாக ஹரிஜனங்களை உள்ளே அனுமதிக்குமாறு வடபகுதி பொலிஸ் சுப்ரிண்டன் எடுத்துவரும் நடவடிக்கையை தடுத்து நிறுத்தி வைக்குமாறு மேற்படி கோவில் பரிபாலகரான பிரம்மஸ்ரீ சு. துரைச்சாமிக் குருக்கள் பிரதமரைக் கோரியுள்ளார்.

இது சம்பந்தமாக அவர் பிரதமருக்கு அனுப்பிவைத்துள்ள மகஜரில் இவ்விதமனாத்காரமான முறையில் ஹரிஜன மக்களை உள்ளே அனுமதிக்கச் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்போது அதனால் ஏற்படும் விளைவுகளுக்கு சுப்ரிண்டனே பொறுப்பாக இருப்பார் எனவும் தெரிவித்துள்ளார்.

## 16 எதிரிகளும் விடுதலை

### சாட்சிகள் முரண்பாடு

குரும்பசிட்டி, வெள்ளி

கடந்த வருடம் ஆகஸ்ட் மாதம் 7-ம் திகதி சட்ட விரோத கூட்டம் கூடி பயங்கர ஆயுதங்கள் தாங்கியவாறு, வீடு உடைத்து சேதப்படுத்தி, இலட்சுமி செல்லமுத்து என்ற பெண்மணியின் தாலிக்கொடியை அறுத்து அபகரித்ததாக சங்கானை நிச்சாமத்தைச் சேர்ந்த பெண்மணி ஒருவர் உட்பட 16 பேருக்கு எதிராக சங்கானைப் பொலிசாரால் தொடரப்பட்டிருந்த வழக்கு மல்லாகம் நீதிபதி திரு. எம். சண்முகலிங்கம் முன்னிலையில் தொடர்ந்து விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. வழக்கு விசாரணையின்பின் எதிரிகள்தரப்பு வழக்கறிஞரின் தொகுப்புரையை அடுத்து சாட்சியம் முரண்பாடு காரணமாக நீதிபதி எல்லா எதிரிகளையும் விடுதலைசெய்து தீர்ப்பு வழங்கினார்.

எதிரிகள் சார்பில் அட்வகேட் கே. வி. எஸ். சண்முகநாதன், வழக்கறிஞர் சிவசிதம்பரனின் உதவியுடன் ஆஜரானார். பொலிஸ்தரப்பில் இன்ஸ்பெக்டர் வி. ரி. மெண்டிஸ் வழக்கை நடத்தினார்.

MANOHARA
JAFFNA
Daily at 10-30, 4-45, 7-00 & 9-45 P m.
John Wayne
in
ELDORADO
Color

ராணி
(யாழ்ப்பாணம்)
ஜெய்சங்கர்
விஜயலக்ஷ்மி
நடித்த
பவானி

3வது வாரம்!
ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-30
போயா தினங்களில் 4 காட்சி
ஜெய்சங்கர்-கே.ஆர். விஜயா
நடிக்கும்
முகூர்த்த நாள்

| சிங்ஸ்லி | பிளாசா | மைலன் |
| --- | --- | --- |
| வெலிங்டன் [யாழ்ப்பாணம்] | விஜயா [மட்டக்களப்பு] | ராஜ் [நீர்கொழும்பு] |
| ஸ்ரீதிருஞ்ஞு [திருமலை] | விஜிதா [அட்டன்] | அயன் [மன்னார்] |

★ ஜெமினி கணேசன்
★ கே. ஆர். விஜயா
நடித்த



ஏ. வி. எம்.
புரொடக்ஷன்ஸ் ராமு

ரூபா 8 கோடி 9 லட்சம்

## அமெரிக்க கடன் உதவி

கொழும்பு, வெள்ளி

இலங்கைக்கு கோதுமை மா வாங்குவதற்கென 8 கோடி 9 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய்க்கான கடன் வழங்க அமெரிக்கா முன்வந்துள்ளது.

இதற்கான ஒப்பந்தம் ஒன்று இன்று கைச்சாத்திடப்பட்டது. பாதுகாப்பு அமைச்சின் நிரந்தரக்காரியதரிசி திரு. ஜி. வி. சமரசிங்க இலங்கை சார்பிலும் அமெரிக்க தூதர் திரு. கொரி அந்த நாட்டின் சார்பிலும் கைச்சாத்திட்டனர்.

## ஜூலை 7-ல் புதிய கூட்டத்தொடர்

கொழும்பு, வெள்ளி

ஆட்சிமன்றக் கூட்டத்தொடர் நாளை முதல் ஒத்திவைக்கப்படுகிறது. ஜூலை 7-ம் திகதி அடுத்த கூட்டத்தொடர் ஆரம்பமாகிறது.

இத்தகவல் இன்று செனட்சபையில் அறிவிக்கப்பட்டது. ஜூலை மாதம் 7-ம் திகதி அடுத்த கூட்டத்தொடரை கவர்னர் ஜெனரல் ஆரம்பித்து உரைநிகழ்த்துவார்.

யாழ்ப்பாண

## கல்லூரி அதிபர் காலமானார்

வட்டுக்கோட்டை, சனி

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரி அதிபர் திரு. எஸ். வி. பாலசிங்கம் நேற்று மாலை காலமாகிவிட்டார். இக்கல்லூரியிலேயே உதவி ஆசிரியராகச் சேர்ந்து, 1964-ம் ஆண்டளவில் அதிபர் பதவியைப் பொறுப்பேற்றார்.

இவர் இளைப்பாறிய மலேஷியா தபால் அதிபர் திரு. ஞா. சபாரத்தினத்தின் புதல்வராவார். இவர் தமது ஆரம்பக்கல்வியை கோலாலம்பூர் விக்டோறியாக்கல்லூரியிலும், பின்னர் கொழும்பு பல்கலைக்கழகத்திலும் பெற்றார். லண்டன் சென்று எம். ஏ. பட்டமும் பெற்றார்.

### ஒத்திவைப்பு

இன்று நடைபெறவிருந்த வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரி வருடாந்த விளையாட்டுப்போட்டி மேற்படி கல்லூரி அதிபர் திரு. எஸ். வி. பாலசிங்கம் காலமானதால் ஒத்திவைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்பட்டுள்ளது.

REGAL JAFFNA
Daily at
4-45. 7-00 & 9-45 P. M.
Richard Johnson &
Elke Sommer
in
DEADLIER THAN
THE MALE
[Adults Only]
no passes & no concession

விற்பனைக்கு

கார்

நல்ல நிலையிலுள்ள கார் EY 1500 தொடர்பிலக்க A40 ஒஸ்டின் கார் விற்பனைக்குண்டு. விலை ரூபா 10,500/-
காலை 8-00 மணிக்கும் மாலை 5-00 மணிக்கும் இடையில் பார்வையிடலாம். 120/4 அரசடிவீதி, யாழ்ப்பாணம்.
1334

மிருசுவில் கி. ச. தேர்தல்

# போட்டியின்றி நாலு பேர் தெரிவு

## இருவர் கட்டுப்பணம் இழந்தனர்

யாழ்ப்பாணம், சனி

நேற்று மிருசுவில் கிராம சபைத் தேர்தல் நடைபெற்றது. 12 வட்டாரங்களிலும் மொத்தமாக 22 பேர் போட்டியிட்டனர். இரண்டு பேர் கட்டுப்பணத்தைஇழந்தனர். நாலு பேர் போட்டியின்றித் தெரிவுசெய்யப்பட்டனர்.

தேர்தல் விபரம் பின்வருமாறு:

1-ம் வட்டாரம்: திருவாளர்கள் வி. சிவஞானசுந்தரம் 63 வாக்குகள், கே. கணபதிப்பிள்ளை: 56 வாக்குகள், எஸ். ஐயம்பிள்ளை 1 வாக்கு.

2-ம் வட்டாரம்: திருவாளர்கள் வி செல்லையா 113 வாக்குகள், எம். அம்பலவாணர் 107 வாக்குகள்

3-ம் வட்டாரம்; திரு. எம் பொன்னுத்துரை போட்டியின்றித் தெரிவுசெய்யப்பட்டார்].

4-ம் வட்டாரம்: திருவாளர்கள் ஏ. டி. பொன்னுக்கோன் 107, கே. ஞானப்பிரகாசம் 60.

5-ம் வட்டாரம்: திரு. எஸ். நடராசா [போட்டியின்றித் தெரிவுசெய்யப்பட்டார்].

6-ம் வட்டாரம்; திருவாளர்கள் கே. பாலகிருஷ்ணன் 68, கே. கந்தசாமி 60.

7-ம் வட்டாரம்: திரு. கே. குலசேகரம்பிள்ளை ]போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டார்].

8-ம் வட்டாரம்; திருவாளர்கள் வி. கந்தையா 67, எம். கந்தசாமி 62.

9-ம் வட்டாரம்: திருவாளர்கள் கே. இராசதுரை 50, ஆர். இராசையா 54.

10-ம் வட்டாரம்- திரு. எஸ். சின்னத்தம்பி ]போட்டியின்றித் தெரிவுசெய்யப்பட்டார்].

11-ம் வட்டாரம்; திருவாளர்கள் எஸ். பாலசிங்கம் 128, எம். எஸ். சி. சரவணமுத்து 15, ஏ. சிவராசா 39.

12-ம் வட்டாரம்: திருவாளர்கள் எம். சரவணமுத்து 90, எஸ். முத்துக்குமாரு 66. [ந. நி]

## முதலாவது விவாகப்பதிவு: 9 குழந்தைகளின் தந்தை

யாழ்ப்பாணம், சனி

சங்கானை பட்டினசபைக் காரியாலயத்தில் நேற்று காலை விவாகப்பதிவுகாரியாலயம் ஒன்றை சங்கானை பட்டினசபைத் தலைவர் திரு. எஸ். கே. திருச்சிற்றம்பலம் திறந்துவைத்தார்.

இங்கு முதலாவதாக பட்டினசபையில் கடமையாற்றும் கே. உலகநாதன் என்ற 9 குழந்தைகளின் தந்தை விவாகப் பதிவு செய்து கொண்டார்.

இக்கிளைக் காரியாலயத்தில் திரு. ஏ. சின்னையா விவாகப்பதிவாளராக ஒவ்வொரு திங்கள், வெள்ளிக்கிழமைகளில் மாலையில் கடமையாற்றுவார்.

சங்கானை கொலை:

## 5 எதிரிகள் விடுதலை

குரும்பசிட்டி, வெள்ளி

சங்கானை குமரேசன் கொலை வழக்கு சம்பந்தப்பட்ட ஐந்து எதிரிகளையும் மல்லாகம் நீதிபதி திரு. எம். சண்முகலிங்கம் விடுதலை செய்து தீர்ப்பளித்தார். வழக்கு விசாரணை முடிவில் சாட்சியங்கள்முரண்பாடாக காணப்படுவதாக நீதிபதி தெரிவித்தார்.

சங்கானை நிச்சாமம் வாசியான வன்னியன் குமரேசன் என்பவரை இவ்வருடம் பெப்ரவரிமாதம் 1-ம் திகதி கொலைசெய்ததாக செல்வரத்தினம், ஆறுமுகம்பிள்ளை, சுப்பையா, நடேசு, சுப்பிரமணியம் ஆகிய ஐவர் மேல் குற்றஞ்சாட்டி சங்கானைப் பொலிசாரால் இவ்வழக்கு தொடரப்பட்டிருந்தது.

எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆர். ஜே. செல்வரத்தினம், திரு. கே. குணரத்தினத்தின் அனுசரணையுடன் ஆஜராகியிருந்தார்.

வின்ஸர் வெண்திரையில்
இன்று காலை 10-30 மணிக்காட்சியுடன் ஆரம்பம்.



✳ முத்துராமன் ✳ உதயசந்திரிகா
தங்கவேலு, சுப்பையா, சுந்தரராஜன்
நடித்த
ராஜாத்தி
பழமையும் புதுமையும் கலந்து திறமைமிகு டைரக்ஷனில் உருவான வெற்றிச் சித்திரம்.

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1968-ம் ஆண்டுஜூன் மாதம் 23-ந்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org